உ

சிவமயம்.

ஸ்ரீஷண்முகநாதன் துணை.

ஸ்ரீ மயூரகிரி
ஸ்தலபுராண சங்கிரக வசனம்.

இஃது

குன்றக்குடி பிர்ம்மஸ்ரீ சங்கீதம்.

...ப்பிரமணியசாஸ்திரிகளவர்களால்

இயற்றப்பெற்றது.

Q26:38·2N92M
N30
149928

...களின் விருப்பத்திற்கிணங்க

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

...ரைட்] 1930 [அ. 6

உ

சிவமயம்.

ஸ்ரீஷண்முகநாதன் துணை.

ஸ்ரீ மயூரகிரி ஸ்தலபுராண சங்கிரக வசனம்.

இஃது

குன்றக்குடி பிர்ம்மஸ்ரீ சங்கீதம்.
ரா.ம.வெ.சுப்பிரமணியசாஸ்திரிகளவர்களால்
இயற்றப்பெற்றது.

பக்தகோடிகளின் விருப்பத்திற்கிணங்க

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1930 [அ. 6

149920

சிவமயம்,

ஸ்ரீ ஷண்முகநாதன் துணை.

முகவுரை.

எந்நாட்டினுஞ்சிறந்த நன்னாடாகிய பாண்டியநாட்டின்கண் குன்றுதோறாடலிற் சிறந்ததாயும் திருவண்ணாமலையாதீனத்துக்குச் சொந்தமான ஐந்துகோவில் தேவஸ்தானங்களுள் நாயகமாக விளங்குகிறதாயும், பிரார்த்தனாக்ஷேத்திரங்களில் மேன்மையுற்றுப்பிரகாசிக்கிறதாயும்,அருணகிரிநாதரால் பாடல்பெற்றதாயும் மயூரநகரம், அரசவநம், கிருஷ்ணநகரம், மயூரகிரியென்னும்பெயர்பெற்று விளங்குகிறதாயும் நீர்வளம் நிலவளம் பொருந்தியதாயும், சுப்ரம்மண்ய க்ஷேத்திரங்களிற் சிறந்ததாயும்,கலியுகவரதரான ஸ்ரீஷண்முகக்கடவுள் மயிலுக்குச்சாபவிமோசனஞ்செய்துபக்தானுக்ரஹார்த்தமாய் வல்லிதேவயானையுடன்வீற்றிருந்தருள்புரிந்து வருவதாயுமிருக்கிற குன்றக்குடியென்ற ஸ்ரீமயூரகிரியின்மான்மியத்தை எளிய செந்தமிழ் நடையில் மொழிபெயர்த்து ஸ்ரீமயூரகிரித்தலபுராணசங்கிரகவசனமென்ற பெயர்கொடுத்து வெளியிட்டிருக்கிறேன். இதைபக்தகோடிகளும் பண்டிதசிகாமணிகளும் குற்றங்களை நீக்கி ஸ்ரீ ஷண்முகக்கடவுளின் ஸ்தோத்ரமாயிருப்பதைமுன்னிட்டுஅங்கீகரிக்கவேணுமாய்ப்பிரார்த்திக்கிறேன். இத்தலத்தில் பிரார்த்தனைக்கு மண்டலக்கணக்காய் தரிசிக்க வரும் பக்தகோடிகளனைவரும் கிருத்திகை, சோமவாரம், சுக்ரவாரங்களிலும் சஷ்டித்திதியிலும் சரவணப்பொய்கை தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி கிரியைப்பிரதக்ஷிணமாய் வந்து தோகையடிவிநாயகர், இடும்பன் முதலிய பரிவாரங்களைத் தரிசித்தபின்பு வல்லிதேவசேனையுடன் விளங்கும் ஸ்ரீ ஆறுமுகக்கடவுளைத் தரிசித்துச் சிரத்தையுடன் இந்தப்புண்ணிய

...ான ஸ்ரீமயூரகிரியாண்டவன் திவ்யபுராண சங்கிரக ...த்தைப் பாராயணஞ் செய்வார்களாயின் செல்வம் ...பி புத்திரப்பேறு களத்திரம் முதலிய நினைத்தகாரியங்களை ஸ்ரீமயூரகிரியாண்டவனின் கிருபையால் பெறுவார்களென்பத ற்கையமில்லை. குன்றக்குடித் திருப்புகழ் ஆறும் ஸ்ரீமயூர கிரியாண்டவன் ஸ்தோத்திரகீர்த்தனங்களும் சேர்த்து அச் சிடப்பெற்றிருக்கிறது.

இங்ஙனம்,

ஸ்ரீ மயூரகிரியாண்டவன் கிருபைக்குப்பாத்திரன்,
சங்கீதம், ரா. ம. வெ. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,
பாறைத்தெரு, குன்றக்குடி.
(இராமநாதபுரம் ஜில்லா)

குறிப்பு:— பிரதிமாதமும் சுக்லபக்ஷ கிருஷ்ணபக்ஷ பிரதோ ஷங்களில் எனது கிருகத்தில் சிவகாம்யம்பாஸமேத ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தியின்படம் ஸ்தாபித்து நடத் திக்கொண்டுவரும் பிரதோஷ சிவபஜனை தர்மத்திற்கு இந்தப் புஸ்தக விற்பனையில் வரும் பொருளை உபயோ கிக்க உத்தேசித்திருப்பதால் இந்தப்புஸ்தகத்திற்கு ஏற் படுத்தியிருக்கும் ஆறணாவை ஒவ்வொரு ஆஸ்திகரும் கொடுத்து திவ்யசரித்திர பாராயண பலனைப்பெறுவது டன் இந்தப்பிரதோஷசிவபஜனை தர்மம் நீடித்துநடந்து வரும்படி செய்தும் சிவகாம்யம்பாஸமேத ஸ்ரீஆனந்த நடராஜமூர்த்தியின் கிருபைக்குப்பாத்திரர்களாகவேணு மென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

நூலாசிரியர்.

உ

சிவமயம்.

ஸ்ரீ ஷண்முகநாதன் துணை.

ஸ்ரீ மயூரகிரித் தலபுராண சங்கிரக வசனம்.

23 JUL 1930

காப்பு.

பூமேவுதிருமணக்கும் பூவைமலர்நிகர்மேனிப்
புனிதப்புத்தே
ளூமேவுசெல்விபுணர் நான்முகனிந்திரன்முதலோர்
நயந்துபோற்றுந்
தேமேவுகொன்றைபுனை தோகையடிக்கணபதிதாள்
சென்னிசேர்த்திப்
பாமேவு செந்தமிழான் மயூரகிரிபுராணமது
பகர்தலுற்றும்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

விநாயகக்கடவுள்.

சீர்கொண்ட தாதையைப்போன் மதன்றனுவைப்
பார்ப்பளவிற் சிதையநூறு
நீர்கொண்ட நால்வாயன் கரிமுகன் வெண்
கோட்டினன் செந்நிறத்தன்வாய்த்த
வேர்கொண்ட கொன்றை புனைசெஞ்சடையோ
னன்பர்மனத்திருக்கு நீ பத்
தார்கொண்ட திறன்முருகன் றன்முன்னோனிரு
சரணந்தலைமேற் கொள்வாம்.

சிவபெருமான்.

அருளரும்பியிதயமதிலான்மாக்கண் மலமதனையகற்றவேண்டிப்
பெருகிய தத்துவங்கூட்டிக் கன்மமெலாம்புசிப்பித்துப் பெயர்த்துப்
[பின்னை
நிருமலஞ்செய்திணையடிக் கீழ்நிறுத்திவிளையாட்டயருநிமலஞானப்
பரமசிவன்றிருவடிகள் புந்தியுஞ்சென்னியும்வைத்துப் பரவுவாமே.

உமாதேவியார்.

மருவலுறுதன்னையுந் தோற்றுவிருளாய்
மறைத்துப் பின்கருணைமல்கிக்
குருவடிவாய்வந்து மலந்தனையகற்றித் தனைச்
சிவனைக் குறிப்பிற்காட்டிப்
பெருகிய முத்தியையுயிர்க்குங் கொடுத்தருளு
மெந்தாயெம்பெருமான் வாமத்
தருகிருக்குமங்கயற் கணுமையவடன் சரண
மலரகத்துள் வைப்பாம்.

சுப்பிரமணியக்கடவுள்.

திருப்பரங்குன்று நற்செந்திமாநக
ரருட்டிருவேரக மாவினன்குடி
பருப்பதப் பன்மைகள் பழம்பெய்சோலையம்
பொருப்பினுமுறைபவன் சரணம் போற்றுவாம்.

வாழ்த்து.

அரசர்தஞ்செங்கோல் வாழ்க வந்தணர்வேள்வியார்க
பெருநிலம்வளங்களீண்டமாதமும் மழைகள்பெய்க
மருவுகசைவவாய்மை மன்னுகவுலகிற்றன் ம
மிரவியுள்ளளவும் பார்மேலிருக்குகயாஞ் செய்நூலே.

அவையடக்கம்.

செம்பினிற் செறியுங்களிம்பினையமலஞ்
செய்திடுங்குளிகையேயனைய
கம்பமால்களிற்றினரசர்வந்தெதிர்கொள்
கவிமதச் செருக்குரும்புலவீர்
தும்பிமாமுகத் தோன்றுணைவன்வாழ் மயூரத்
தொல்கிரிபுராணமகிமைத்தே
னம்புவியுவப்ப மறுவிலா வணிசெய்
தன்புடன்கொள்க நன்றெனவே.

வேறு.

வாதராயணன் சூதனுமுனிவர்க்கு வழங்கச்
சூதமாமுனிவனத்துறைமுனிவர்க்குச் சொன்ன
வாதியாகிய புராணமூவாறினுட் சிவனை
யோதுதொல் கதைபத்தெனமொழிவர் நன்குணர்ந்தோர்.
அன்னபத்தினுளதிகமாஞ் சைவமாங்கதனிற்
பின்னராயகூறு ருத்திரசங்கிதை பேசும்
வன்னமாமயிற்கிரியது மகிமையை வடநூல்
சொன்னவாறியான்றமிழினாற் சொல்லுதலுற்றேன்.

பாயிரம் முற்றுப் பெற்றது.

மயூரகிரித் தலபுராண சங்கிரக சுலோகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

சிவமயம்.

ஸ்ரீ ஷண்முகநாதன் துணை.

ஸ்ரீமயூரகிரித் தலபுராண சங்கிரக வசனம்.

முதலாவது
மயூரகிரியின் வரலாறுரைத்த சருக்கம்.

நைமிசாரண்ணியத்துக்குச் சூதமகாமுனிவர் போய்ச்சேர ஆண்டிருந்த முனிவரனைவரும் எதிர்கொண்டு அஞ்சலித்து ஈண்டுவருகவென்றழைத்து ஆசனத்திலிருத்தி உபசாரங் களைச்செய்து நமஸ்கரித்து முருகக்கடவுளுடைய சரித்திரத் தைக் கேட்கவிரும்பினோமென்று நைமிசாரண்ணியமுனிவர் கள் விண்ணப்பஞ்செய்யச் சூதமுனிவர் சைவபுராணத்தில் உருத்திரஸம்ஹிதையில் சொல்லப்படும் மயூரகிரியின் பெரு மையை நாரதமுனிவர் பிரம்மாவைக்கேட்க, அவர் நாரத முனிவர்க்குபதேசித்தபடியே யான் சொல்லுவேனென்று அம்முனிவர்களுக்குக் கூறுவார்.

சத்தியலோகத்தில் பிரம்மா, இந்திராதிதேவர்களும், வசிட்டர்முதலான முனிச்சிரேட்டர்களும், பாதகமலங்களை வணங்கித் தோத்திரஞ்செய்ய வீற்றிருக்க, அந்த அழகிய சபையிலிருக்கும் நாரதமுனிவர் எழுந்துநின்று எம்பெரு மானே பூமியின் யோசனை மேருமலைக்குக் கிழக்கே ஐம்பது கோடியாம். மேற்கினும் ஐம்பதுகோடியாம். இதில் சம் புத்தீவே விசேஷஸ்தானமாம். இச்சம்புத்தீவும் நவகண்டங் களாகும். இந்த நவகண்டங்களுள் விசேஷஸ்தானம் பாத கண்டமாம். அந்தப் பாதகண்டம் ஒன்பது பகுதியுள்ளது. அவ்வொன்பது பகுதிகளுள் குமரிகண்டம் விசேஷஸ்தா னம். அக்குமரிகண்டத்திலிருக்கிற பற்பல மலைகளுள்ளே

மயூரகிரியில் சுப்பிரமணியப்பெருமான் எழுந்தருளியிருப்ப தென்ன ? அவ்விதமெழுந்தருளியிருப்பதற்குக் காரணம் என்ன ? அவர் அவ்விடத்திற்செய்யுந்திருவிளையாடலென்ன? மயூரகிரியைச் சார்ந்த வனத்தின் பெயரென்ன? மகிமையுள்ள தீர்த்தங்களெத்தனை? இருசக்திகளோடும் சுப்பிரமணிய பெருமானைப் பூசித்தவர்கள் யாவர்? இவைகளெல்லாவற்றையும் விவரித்துக்கூறியருளுகவென்று நாரதமுனிவர் விண்ணப்பம் செய்யப் பிரம்மாவும் சுப்பிரமணியப் பெருமானைத் தியானித்துச் சொல்லுவார். கயிலையங்கிரியில் சிங்காசனத்தில் இரத்தினபீடத்தில் உமாதேவியார் வாமபாகத்தில்விளங்கச் சிவபெருமான் வீற்றிருந்தார்.

உமாதேவியார் முன்னொரு கற்பகாலத்தில் சிவபெருமானை வணங்கி விண்ணப்பஞ்செய்வார். ஆன்மகோடிகள் மலமாகிய இருளில் அழுந்தி வருத்தமுற்றனவாதலால் சிருட்டித்துத்திதிப்பது எத்தகைமையாகுமென்று விண்ணப்பஞ் செய்ய அவ்வுமாதேவியாரை இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தைத் தேவியாராக இடப்பக்கத்தில்வைத்தருளியும் மற்றைப் பாகத்தை ஒருதிருமுகமும், இரண்டு திருக்கைகளும், இரண்டு திருவடிகளும்பொருந்திய குழந்தையாகவும் படைத்தருளிச் சிவபெருமான்புதல்வரைத் தழுவிக்கொண்டு மடியின்மீதுவைத்து உச்சிமோந்து ஞானசத்தியை அப்புதல்வருடைய இருதயத்தில் பதித்து இச்சாசத்தியையும் கிரியாசத்தியையும் படைக்கலங்களாகக்கொடுத்து ஞானசத்திதரன் குகன் விசாகன் என்று திருநாமங்களைத் திருவாய்மலர்ந்தருளி கயிலையங்கிரியினிடப்பக்கத்தில் கோயிலையுண்டாக்கி அவிடத்திலிருப்பாயாகவென்று அருளிச்செய்தும் பஞ்சகிருத்தியங்களைச் செய்கவென்று அதிகாரம் கொடுத்தும் அழகையுடைய ஒருமயிலை வாகனமாகக் கொடுத்தருளியும் ஜயந்தன், அக்கினிசிகன், கிருத்திகாபுத்திரன், பூதபதி, சே

ஞானி, குகன், க்ஷேமருலன், விசாலாக்ஷன் முதலான அட்ட வித்தியேசுவரர்களையும் பார்த்தருளி இப்புதல்வரோடு செல்லுங்களென்று பணித்தலும் அவர்களும் அவ்விதமே வந்தடைய அவர்களுடனே சுப்பிரமணியக் கடவுள் மாதாபிதாக்களை நமஸ்கரித்து மயில்வாகனத்தின்மீதேறிச்சென்று தம்முடைய கோயிலையடைந்து மயிலை வாயிலில்நிறுத்திக் கோயிலிற் பிரவேசித்து அங்கே யொரு மண்டபத்திற்பொருந்திய சிங்காசனத்தின்மீதுவீற்றிருந்து பழையவான்மாக்களைச் சிருட்டித்துக்கொண்டிருக்குங்காலத்தில் சூரன் தன் தம்பிகளாகிய தாரகன், பதுமன், சிங்கன் இவர்களோடும் சாகத்தீவில் பதினுயிரவருடம் வரைக்கும் செங்கோலைச்செலுத்தி நல்லபோகங்களையனுபவித்தபின்னர் ஆராயின் அனுபவித்தவைகளையே அனுபவித்தனமன்றி வேறொரு பிரயோசனமுமின்றென்று போகங்களில் விருப்பைக்குறைத்துச் சுப்பிரமணியப்பெருமான்மீது அன்புசெய்து குமாரகண்டத்தில் வந்து ஏகாம்பரநாதசுவாமி எழுந்தருளியிருக்கின்ற காஞ்சிமாநகரமே தவஞ்செய்பவர்களுக்கு உயர்ந்தஸ்தானமென்று கேள்வியுற்று அந்தக் காஞ்சிபுரத்தில் சூரன் தம்பியரோடு சென்று மூன்று தாமரைமலர் ஒருநாளத்தில் நாடோறும் அலர்கின்ற தடாகத்தில் ஸ்நானம் செய்து கோயிலிற்பிரவேசித்துக் காமாக்ஷியம்மையாரோடு ஏகாம்பரநாதசுவாமியைத் தரிசித்து வணங்கித் துதித்துத்திருவருளைப்பெற்று அவிடத்தினின்று நீங்கித் தவவனத்தையடைந்து மனத்திலே சுப்பிரமணியப்பெருமானையிருத்தி பரிசுத்தரே! தேவரீருடைய வாகனமாக அடியேனுக்கு ஒரு வரத்தைத் தந்தருளுகவென்று சிந்தித்து, அரியதவத்தைச் செய்தான். இச்சரித்திரம் இவ்வளவில்நிற்க, விஷ்ணுவும் நான்முதலாகிய தேவர்களும் கயிலையங்கிரியிற்போய்ச் சிவபெருமானைவணங்கிப் பக்கத்திலுள்ள சுப்பிரமணியர்கோயிலையடைந்து, மயிலின்முன்ன

ரேசென்று, நம்முடையவரவைச் சுப்பிரமணியப்பெருமானு க்கு விண்ணப்பம் செய்தருள்கவென்று சொல்ல, மயிலும் சுப்பிரமணியப்பெருமானிடம் எங்கள் வரவை விண்ணப்பம் செய்யச் சுப்பிரமணியப்பெருமானும் அழைத்துவரக்கடவை யென்று அருளிச்செய்வதற்குமுன்னரே வெளியே வந்து எங்களையுள்ளேவிடுதலும் யாங்கள் வாயிலைக்கடந்துசென்று சுப்பிரமணியப்பெருமானை முறைப்படி நமஸ்கரித்துத் தோத் திரஞ்செய்து, பரப்பிரம்மமே அடியேங்களையன்போடு பாது காத்தருளுகவென்று குறையிரந்தோம். சுப்பிரமணியப் பெருமானும் அவ்விதமே செய்வோமென்று திருவாய்மலர்ந் தருள விடைபெற்றுஅவ்விடத்தினின்றுநீங்கி மயிலுக்குமுன் னரேவந்து உனது நிலையைப் பெறக்கருதிச் சூரன் காஞ்சி மாநகரத்தில் தம்பியர்களோடு தவஞ்செய்கிறான் என்று கூறி விஷ்ணுமுதலிய யாமெல்லோரும் எங்களுடைய பதவிகளிற் சேர்ந்தோம். அதைக்கேட்ட மயில் யான் அவர்களுக்குத் தீமையைச்செய்யேன். தீமையில்லாத வழியாகவொன்றைச் செய்வேனென்று குற்றமில்லாத சாமீபத்தையவர்களடை தல்வேண்டுமென்று சுப்பிரமணியப்பெருமானைத்தியானித்து வணங்கியது. மயில் இவ்வாறு எண்ணுதற்கு முன்னரே பூதகணங்கள் விமானத்தோடு காஞ்சிபுரத்தை யடைந்து காலந்தாழ்க்காது இவ்விமானத்தின் மீதேறிச் செல்லுங்க ளென்று சூரன் முதலியோரைப் பார்த்துக்கூற, அவர்களும் நன்றென்றுகூறித் தேவவிமானத்தின்மீதேறி, ஆகாயவழி யாகச்சென்று கந்தமலையையடைந்தார்கள். அழுக்காறு நீங் கிய மனத்தினையுடைய சூரனாதியோர் பூதகணங்களோடொ ன்றாகப் பரிசுத்தமாகிய வடிவைப் பொருந்தியிருந்தார்கள். இதைக்கேட்ட மயில் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தது. அண் டவாபரணரென்னும் பூதப்படைத் தலைவருக்கருகே சூரன் போய்க்கண்டபொழுது அவர் பிரம்ம விஷ்ணுக்கள் மயிலி

னிடத்தில் உங்களுடைய தவத்தின் கருத்தையெல்லாம் கூறி னார்கள் என்று நிகழ்ந்தவற்றையெல்லாம் சூரனிடம் தெரிவித்தார். சூரன் தேவர்களை வெல்லுதற்குரிய ஸமயம் பார்த்திருந்தான். இவ்வாறு நிகழுங்காலத்தில் விஷ்ணுவும் என்னை முதலாகவுள்ள தேவர்களும் கயிலையங்கிரியிற்சென்று,சுப்பிரமணியர்கோயிலையடைந்து,மயிலுக்கு முன்னரேசென்று எங்களுடைய வாகனங்களையெல்லாம் நிறுத்திவிட்டு மயிலினுடைய அனுக்ஞையால் உள்ளேசென்றுச் சுப்பிரமணியப் பெருமானைத் தரிசித்துத் துதித்துக்கொண்டிருந்தோம். அந்தசமயம் சூரன் வணங்குதற்காய் வந்தான். அவன் மயிலுக்குமுன்னே சென்று நமஸ்கரித்து எழுந்து தேவரீருடைய பக்கத்திலிருந்து எனக்கெதிரில்லையென்று கருடனும் அன்னமும் சொல்லிற்று. இது உண்மையென்று சொல்லிச் சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளை வணங்கிச்சென்றான். மயில் கோபித்துப் பெருமூச்சுவிட்டுக் கண்கள் சிவந்து, குகப்பெருமானுடைய அனுக்கிரகத்தைப்பெறுதற்கு என்னையாசித்துச் செல்லும் தேவர்களுடைய வாகனமாகிய வெவ்வியபறவைகள் என்னை நன்குமதியாமற் பேசியதுகளென்று கோபித்துக்கொண்டு தன்னுடைய அகன்ற வாயினாற்பற்றி விழுங்கி முதற்கடைவாயிலை அடைந்தது. விஷ்ணுவும், யானும், இந்திரனும், ஏனையோர்களும் முருகக்கடவுளது கிருபையைப் பெற்று, வெளியில்வந்து, மயிலைக் கண்டு, எங்கள் வாகனங்களைக் காணாமல் வருந்தி யாங்கள் ஞானக்கண்ணினால் நடந்தவைகளையறிந்து குகப்பெருமானையடைந்து சுவாமீ மயில் எங்கள் வாகனங்களை விழுங்கிற்று. அதைத் தரும்படி பணித்தருளுகவென்று விண்ணப்பஞ் செய்தோம். குகப்பெருமானும் நடந்தவைகளையெல்லாம் அறிந்து, மயிலை இவ்விடத்துக்கழைக்கவென்று ஆக்ஞாபிக்க, ஏவலாளர் மயிலைக்கொண்டுவந்துவிட, மயிலே! உன்னகங்

காரத்தினால் குற்றமில்லாத அன்னத்தையும் கருடனையும் விழுங்கியதென்ன? அவைகளைக் கக்குயென்று கட்டளையிட மயில் மனம்நடுங்கி வாயைத் திறந்து கக்குதலும், அந்த இரண்டுபக்ஷிகளும் இறவாது வெழுந்து வணங்க, உங்கள் யஜமானர்களோடு சென்று, வாழுங்களென்று ஆக்ஞாபிக்க உடனே யாங்களும் விடைபெற்று வாகனங்களிலேறி எங்கள் பதவிகளையடைந்தோம். பிறகு குகப்பெருமான் மயிலே நீ அகங்காரத்தாற்கடினமாய்ப் பயம் நீங்கிப் பிழைசெய்தாய். அந்தப் பாவம் நீங்குமாறு கர்மபூமியிலே மலையாய்க்கிடந்து, அதனை நீக்குவாயென்று திருவாய் மலர்ந்தருள, மயில் நடுங்கிப் பெருமானே! இந்தக் குற்றத்தைப் பொருத்தருளுகவென்று நமஸ்கரித்துத் துதிக்க, குகப்பெருமானும் குமரிக் கண்டத்தில் பாண்டியநாட்டில் கொன்றை வனமொன்றிருக்கிறது; அதினடுவே வளஞ்சிறந்த திருப்புத்தூரென்னும் க்ஷேத்திரமொன்றிருக்கிறது; அதற்குக் கிழக்குப்பக்கமாகப் பாதியோஜனை தூரத்தில் அரசவனமிருக்கின்றது; அவ்விடத்தில் நல்லமலையாயிருக்கக் கடவாய். சரவணப் பொய்கையிற்றோன்றி உன்னிடத்தில் வந்து மோக்ஷத்தைத் தருவோமென்று குகப்பெருமான் திருவாய்மலர்ந்தருளினார். மயில் அந்தத் திருவாக்கைக் கேட்டு, பாதங்களைப் பிரதக்ஷிணஞ்செய்து, வணங்கி விடைபெற்றுக்கொண்டு, மனம் மிக வருந்தி திருக்கேதாரத்தையடைந்து, கங்கை நீரில் ஸ்நானஞ்செய்து, கோதாவிரி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அருணாசலத்திற்சென்று சிவபெருமானை நமஸ்கரித்துத் துதித்து, அவ்விடத்தினின்று நீங்கி, பற்பல சிவக்ஷேத்திரங்கள்தோறுஞ்சென்று துதித்துப்பாண்டியநாட்டையடைந்து மதுரை, திருப்பூவணம், திருச்சுழியல், திருப்பரங்குன்றம், திருக்கொடுங்குன்றம், திருவேடகம், திருவிராமேச்சரம், திருக்கானப்பேர், திருநெல்வேலி, திருவாப்பனூர், திருப்புத்தூர் முத

லான சிவஸ்தலங்களோடு கூடின பாண்டி நாட்டிலிருக்கும் வளம் நிறைந்த திருப்புத்தூரினெல்லையையடைந்து, திருத் தளியென்னும் வாவியிலே ஸ்நானஞ்செய்து பஞ்சாக்ஷரத் தையுச்சரித்து கோயிலையடைந்து, சிவபெருமானைத் தரிசித் துத் துதித்து வணங்கிக் காத்தருளுக காத்தருளுகவென்று பிரார்த்தித்து நிற்கின்ற மயிலுக்குச் சிவபிரான் அசரீரிவாக் கால் இந்த நகரத்துக்குக் கீழ்த்திசையிலிருக்கிற அரசவனத் திற்போயிரு. நமது குமாரன் உன்னிடத்தில் வந்து இரக்ஷிப் பனென்று திருவாய் மலர்ந்தருளினர். சிவபிரான் வாக் கைக்கேட்டு விடைபெற்றுக்கொண்டு மயில்வளஞ்செறிந்த அரசவனத்தையடைந்து நீர்பொருந்திய தடாகத்தில் ஸ்நா னஞ்செய்து விளையாடி அரசவனத்தின் நடுவிற்போய்ச் சிவ பெருமானுடைய திருவடிகளைத் தியானித்து உத்திரதிசை யைப் பார்த்து மலையைப்போல வடிவெடுத்து மயிலிருந்தது. இச்சரித்திரத்தைக் கேட்டவர்களும் படித்தவர்களும் இந்தி ரனைப்போல் உலகத்தில் செல்வத்தோடு வீற்றிருப்பாரென்று பிர்ம்மா நாரதமுனிவருக்குச் சொன்னரென்று சூதமுனிவர் நைமிசாரண்ணியமுனிவர்கட்குச் சொல்லியருளினர்.

மயூரகிரியின் வரலாறுரைத்த சருக்கமுற்றிற்று.

இரண்டாவது

மயூரகிரியிற் குமாரசுவாமி தோற்றிய சருக்கம்.

மயில்மலையாகவிருந்ததனைச்சொல்லியருளினீர். கேட்டு மனங்களித்தேன். சுப்பிரமணியப்பெருமான் பூமியில் வந்து மயிலினுடைய சாபத்தைநீக்கி, அம்மலையிலெழுந்தருளியிருந் தமையைச் சொல்லியருளுகவென்று நாரதமுனிவர் கூறச் சுப்பிரமணியக்கடவுளைத்தியானித்துப் பிர்ம்மா சொல்லுவார். பின்பு முருகக்கடவுள் சூரனுதியவரை யழைத்துச் சற்றே

கோபித்து, நீங்கள் நமது மயில்வாகனத்திற்கிடையூறு செய்ததினால் இவ்விடத்தைவிட்டு நீங்கிக் கொடிய கொலையைப் புரியுமசுரர்களாய் ஜனித்துப் பூமியிலிருங்களென்று திருவாய் மலர்ந்தருளினர். இதைக்கேட்ட சூரனாதியோர் சரீரம் நடுங்கப் பெருமூச்சுவிட்டுச் சிவகுமாரரே நாங்கள் காஞ்சிமாநகரத்தில் தேவரீருடைய வாகனமாகும்படி தவஞ்செய்தோம். தேவர்கள் பொறாமையினால் மயிலினிடம் எங்கள் செய்கையைச் சொன்னார்கள். மயில் அதைக்கேட்டு எங்களை இங்கேயழைத்தது. தேவர்கள் பகையைச் செய்த தன்மையினால் அடியேங்களுமிதனைச் செய்தோம். பொறுத்தருள்கவென்று விண்ணப்பஞ் செய்தார்கள். முருகக்கடவுளும் சூரனும் பதுமனும் ஒருடம்புடையவராகவும், சிங்கனுந் தாரகனும் சிங்கமும் யானைமுகமுடையவர்களாகவும் அசுரயோனியிலவதரித்து ஆயிரத்தெட்டண்டத்தையுமாசுபுரிந்து உங்களிடத்திற் குற்றஞ்செய்தோரை வருத்திவாழுங்கள். அக்காலத்தில் யாம் பரமேச்வரரிடத்தில் அறுமுகங்களையுடைய பாலகராக வந்தவதரித்து உங்களிடத்தில் வந்து குற்றத்தை நீக்கி நினைத்த வரத்தைத் தருவோமென்றருளிச் செய்தார். அவ்விதமே சூரன் முதலிய நான்கு வீரரும் மாயையென்னும் பெண்ணைக் காசிபமுனிவர் உவந்து தழுவ, அவளுடைய வயிற்றிற் குழந்தைகளாகவவதரித்துச் சுக்கிராசாரியாது உபாயத்தினால் தவஞ் செய்து முடித்து, ஆயிரத்தெட்டண்டத்தையும் என்றுமழியாத சரீரத்தையும் பெற்றார்கள். தேவர்களுடைய உலகையடைந்து அவர்களை வெற்றி கொண்டு கொடுங்கோல் செலுத்தி உலகம் வருந்தவிருந்தார்கள். அந்தச் சூரனாதியரால் துன்பப்படுகின்ற நாங்களெல்லோரும் கயிலையங்கிரியை அடைந்து காத்தருளுகவென்று நந்திதேவருடைய பாதங்களில் வணங்கி விண்ணப்பஞ் செய்தோம். நந்திதேவரும் மனமிரங்கிச் சிவபெருமானிடம் எங்

கள் குறையைக் கூறித்திரும்பிவந்து எங்களையுள்ளே செல்லும்படிசொல்ல நாங்களும் சிவபெருமானுக்கு முன்சென்று எங்கள் குறையைக்கூறச் சிவபெருமானும் உங்கள் கவலையைத் தீர்ப்போமென்றருளிச் செய்தார். அதைக்கேட்டு, இனி உய்ந்தோமென்று விடைபெற்றுக்கொண்டு வந்து மேருகிரியிலிருந்தோம். பின்பு சிவபெருமான் உமாதேவியாரை விவாகஞ்செய்து ஆறுமுகங்களைப் பொருந்திக் குமாரசுவாமியைத் தாங்கி நெற்றிக்கண்களினின்றும் ஆறு பொறிகளாய் விழச்செய்து, வாயுவினிடத்திற் கொடுக்க, அந்த வாயுவுந் தனக்கு முன்வந்த அக்கினியினிடம் கொடுக்க, அந்தவக்கினியுங் கங்கையிற்செலுத்தக் கங்கையுஞ்சரவணப் பொய்கையில் விடுதலும் ஆறு குழந்தைகளாய்ப் பொருந்தி விளையாடலைச் செய்ய அவ்விடத்தில் பார்வதிதேவியார் சிவபிரானோடு வந்து கையாற் சேர்த்தெடுத்தணைக்கக் குமாரசுவாமியும் முகம் ஆறும், கை, பன்னிரெண்டாயும், கண் பதினெட்டாயும், விளங்கும் ஒரு திருவுருவமாகத் தோன்றினார். பின்சிவபிரான், பார்வதியார், பாலகாகிய, யிருவரோடும், கயிலையங்கிரியையடைந்து, சுகமாயிருந்தார்கள். பார்வதியார் விரைந்து செல்லும்பொழுது சிலம்பினின்றும் உதிர்ந்துகிடக்கும், நவரத்தினங்களில். நவசத்திகள் தோன்றினார்கள். அந்தநவசத்திகளைச் சிவபெருமான் விரும்பிநோக்க, அவர்கள் கர்ப்பங்கொண்டு. வீரவாகுமுதலான இலக்ஷத் தொன்பது வீரரைப்பெற்றார்கள். அந்தத் தம்பியருடன் குமாரசுவாமி திருவிளையாடல்செய்து வீற்றிருக்கும் நாளில், விஷ்ணுமுதலான நாங்கள் போய்ச் சிவபெருமானை வணங்கிச் சூரனால் மிகமெலிந்தோமென்று விண்ணப்பஞ்செய்ய அவர் புதல்வரையழைத்துச். சூரனாதியோரைவதைத்துத் தேவர்களுடைய துயரத்தைத்தீர்த்து வருகவென்று. திருவாய்மலர்ந்தருளிப் பதினொருருத்திரர்களைப் படைகளாகக்

கொடுத்தும், வேலொன்றையுமுண்டாக்கிக்கொடுத்தும். வீர வாகுமுதலியோரைப் படைத்துணையாகக்கொடுத்தும், இரண்டாயிரம்வெள்ளமென்னும் தொகையையுடைய பூதங்களையும் தேரொன்றையுங் கொடுத்து. மகனே போய்வருகவென்று ஆக்ஞாபிக்கக் குமாரசுவாமியும், இருவருடைய பாதாரவிந்தங்களில்வணங்கி. விடைபெற்றுக்கொண்டு. தேர்மீதேறி, வாத்தியங்களொலிக்கப் போய்த்தாரகனைக்கிரவுஞ்சமலையுடன்பிளந்து தேவர்களோடு குமாரசுவாமி திருச்செந்திப்பதியில் வந்துசேர்ந்து வீரவாகுவைத் தூதாகவனுப்பிச் சூரனுக்குப் புத்திகள் பலவற்றைக்கூறுவித்து அவனவற்றை மனத்திற்கொள்ளாது தள்ளினதையறிந்து சேனைகளோடு மகேந்திர நகரையடைந்து பானுகோபனையும் சிங்கமுகனுகிய தம்பியையும் சேனுதிபதிகளையும் வதைத்து, ஆறுநாளிற் சூரனை வேற்படையினுற்கொன்ருர். கொடிய சூரபன்மன் குமாரசுவாமியின் முன் சேவலும் மயிலுமாய் வந்தான். குமாரசுவாமி அம்மயிலிலேறிச் சேவலைத்தேரின்மீது கொடியாக நிறுத்தித் திருச்செந்திப்பதியை வந்தடைந்து திருப்பரங்குன்றில் தெய்வநாயகியம்மையாரை மணஞ்செய்து தேவருலகிற்சென்று இந்திரனுக்கு முடியைச் சூட்டிப் பின் கயிலையங்கிரியையடைந்து மாதாபிதாக்களுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்குமுன் சிவபெருமானுமுமாதேவியாரும் அணைத்துக் குமாரனே வருகவென்று தங்கள் மடிமீதுவைத்துக்கொண்டு, மகனே! நீ சூரனை வதைத்து வந்தனையோவென்றருளிச்செய்ய, பிதாவே! தேவரீருடையகிருபையால் வதைத்தேனென்று கூறுதலும் இருவரும் வியந்தார்கள். பின் குமாரசுவாமி கந்தமலையிற்போய் வீற்றிருந்தருளினுர். சில நாட்கழித்தபின் செருத்தணிமலையில் வீற்றிருந்தார். அக்காலத்தில் வள்ளிநாயகியாரது சரித்திரத்தை முனிவனே நீ போய்ச் சொன்னுய். வள்ளிமலைக்கு அரசனுன நம்பியென்

பவன் செய்ததவத்தால் மானின் வயிற்றிலவதரித்த வள்ளி தேவியைக் காண்போமென்றெழுந்து வள்ளிமலையிற்போய் பார்த்துத் தமது தமையனாராகிய விநாயகக்கடவுளால் திரு மங்கலியதாரணஞ் செய்து வள்ளிநாயகியாரோடு செருத் தணி மலையிற்போய் வீற்றிருந்து பின்பு கந்தமலையிற்போய் வீற்றிருந்தருளினர். சிலநாட்கழித்தபின்பு குமாரசுவாமி மயிலினுடைய சாபத்தைநீக்கத் திருவுள்ளத்திற்கருதிச் சூர னாகிய மயிலிலேறி விஷ்ணுமுதலிய தேவர்கள் புடைசூழ ஆகாயவழியாகச்சென்று மயூரகிரியிற்றோன்றினர். உடனே மலையிரண்டு வடிவமாய் ஒன்றுமயிலாயும் ஒன்று மலையாயு மாயிற்று. அம்மலையில் சாபம் நீங்கிக் குமாரசுவாமியினு டைய பாதங்களில் வணங்கிக் காத்தருளுகவென்று பலவா றாகத் தோத்திரஞ்செய்யும் மயிலினுடைய சரீரத்தைத் திருக் கரத்தால் தடவி நன்றாயிருப்பாயென்று பக்கத்தில் வைத்த ருளினர். இச்சரித்திரத்தைக்கேட்டவர் எழுதினவர் படிக் கும் மேன்மையினை யுடையோர் நூறு அசுவமேதயாகஞ் செய்தபலனையும் பிராம்மணருக்குப் பூமிதானம் செய்தபல னையும், கங்காஸ்நானம் செய்தபலனையும் மிகப்பெற்றுப்பூமி யில் செல்வத்தோடு வாழுவரென்று சூதமுனிவர் நாதருக் குப் பிர்மாகூறியபடியே கூறினேனென்றுநைமிசாரண்ணிய முனிவர்கட்குச் சொல்லியருளினர்.

மயூரகிரியிற் குமாரசுவாமிதோற்றிய சருக்கம்முற்றிற்று

மூன்றாவது
தீர்த்தமஹிமையுரைத்த சருக்கம்.

குமாரசுவாமி வந்து மயூரகிரியில் வீற்றிருந்தமையைச் சொன்னோம். இனிக்கெடாத தீர்த்தமொன்று தோன்று தலைச் சொல்வாம். மயில் குமாரசுவாமியைப்பார்த்துத் தேவ

ரீருடைய திருநாமம் நீங்காத தடாகத்தைத் தருதல் வேண்டும். இருசத்திகளுடன் யெப்பொழுதுமிந்தமலையில் வீற்றிருத்தல் வேண்டும். அடியேனும் தேவரீரைப்போற் வடிவத்தைப் பொருந்தல்வேண்டும். அப்பனே இவற்றைத் தந்தருள்கவென்று வணங்கிற்று. குமாரசுவாமியும் அவ்விதமே மயூரகிரியின் சாரலில் தடாகத்தையுண்டாக்கி இந்தத் தடாகத்தில் எவரா்யினும் நம்மைத் தியானித்து ஸ்நானஞ் செய்தால் அவர்கள் நினைத்தபடி இப்பிறப்பிற் போகங்களை யனுபவித்து முடிவில் பதமுத்தியை அடைவார்கள். நான்குவித புருஷார்த்தங்களேயுந் தருகின்ற அந்தத் தடாகத்திற்குச் சரவணமென்ற பெயரையுமமைத்து இத்தடாகத்தில் பூர்வபக்ஷ ஷஷ்டி சுக்கிரவாரம் கார்த்திகை நக்ஷத்திரம் வியதிபாதம் மகோதயம் அர்த்தோதயம் சோமவாரம் சூரியவாரம், அமாவாசை, பூரணை, சூரியகிரகணகாலம், சந்திரக்கிரஹணகாலம், மன்வாதிதினம், மாதசங்கிராந்தி, பிரதோஷகாலம் ஆகிய இப்புண்ணியகாலங்களில் ஸ்நானம் பண்ணி இம்மலையைப் பிரதக்ஷிணம்செய்து, நம்மை வணங்கும் மேன்மையையுடையோர் பூமி முழுதையும் அரசாண்டு நெடுங்காலமிருந்து பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்குமடைதற்கரிய நமதுலகத்தை அடைவார்கள். புதல்வரில்லாத மலடிகள் இவ்விரதத்தை அனுட்டித்துப் பொய்கையில் மூழ்கி மலையைப் பிரதக்ஷிணம்வந்து எம்மை வணங்குவாராயின் அழகுபொருந்திய புதல்வர்களை அடைவார்கள். இன்னும் இதனுடைய பெருமை அளவில்லாதன எல்லாவற்றையும் யாம் கூறினுல் மலியும். மயிலே நீ சாரூபத்தையடைய விரும்பில் காவிரிதீர்த்தக்கரையில் சமுத்திரத்துக்கு ஒன்றரை யோஜனை தூரத்தில் சீர்காழியென்னும் தலமிருக்கிறது. அதற்குத் தெக்குப்பக்கமாய் ஒரு யோஜனை தூரத்தில் விஷ்ணுவினது நகரமொன்றிருக்கிறது. அந்நகரில் விஷ்ணு சிவ

பெருமானைப் பூஜித்து விரும்பினவற்றைப்பெற்று அத்தலத்திற்கும் அந்த இலிங்கத்திற்கும்தமது பெயரை வைத்தார். நீ அத்தலத்திற்குப்போய் அந்தச்சிவலிங்கத்திற்கும் அத்தலத்திற்கும்உன்பெயரை வைத்துஅவ்விடத்திலிருப்பாயாக.யாம் உன்னிடம் வந்து கிருபைபுரிவோமென்று கட்டளையிட்டார். மயில் நன்றென்று நமஸ்கரித்துத்துதித்து எம்பெருமானே இன்று முதலாக தேவரீரை மயூரகிரிநாதரென்று கூறுதல் வேண்டும். இம்மலையையும் மயூரகிரியெனக்கூறுதல் வேண்டுமென்று விண்ணப்பம்செய்யக் குமாரசுவாமியும் மயிலே சரவணப்பொய்கையின் வடபாகத்தில் மயூரேசரென்றவொரு சிவலிங்கம் நிலையாகவிருக்கும் பார்வதியாரோடும் வீற்றிருக்கும் அச்சிவபெருமானுக்கு மேல்பாகத்தில் ஒரு தடாகத்தைத் தோண்டி அதற்கு உன்பெயரைவைத்து அதில் முழுகி அந்தச்சிவலிங்கத்தைப் பூஜித்து இருப்பாயாகவென்றருளிச் செய்தார். குமாரசுவாமியும் தேவர்களுடன் எழுந்து சரவணப்பொய்கையில் முழுகி அந்தச்சிவலிங்கத்தை விதிப்படி பூஜித்து நமஸ்கரித்து எந்நாளும் தேவரீர் என் மலையில் வீற்றிருத்தல் வேண்டுமென்று மயிலே நீ வேண்டியதன்மையினால் அவ்விதமேவீற்றிருப்போமென்றருளிச் செய்து கந்தமலைக்குப் போயினார். அன்றுமுதல் மயூரகிரியிலும் எழுந்தருளியிருந்தார். குமாரசுவாமி வந்து வீற்றிருத்தலினாலே மயூரகிரிக்கு நாற்றிசையிலும் ஐந்து குரோசம் வரைக்கும் இருக்கின்ற ஜீவராசிகளிறக்கும் பொழுது யமவாதனையை அடையாது கயிலையங்கிரியையடையும் இச்சரித்திரத்தைக் கேட்பவர் படிப்பவர் குமாரசுவாமியினுடைய கந்தலோகத்திற் சேருவாரென்று சூதமுனிவர் பிர்ம்மா நாரதருக்குச் சொன்னபடியே கூறினேனென்று நைமிசாரண்ணிய முனிவர்கட்குச் சொல்லியருளினார்.

தீர்த்தமஹிமையுரைத்தசருக்கம் முற்றிற்று.

நான்காவது

மயூரம் முத்திபெற்ற சருக்கம்.

மயில் தனக்கருளிச் செய்தபடி மலைக்குத் தெற்குப் பக்கமிருக்கின்ற சரவணப்பொய்கையில் முழுகி, அருகில் வீற்றிருக்கின்ற சிவபெருமானையும் விதிப்படி பூஜித்து மேற் றிசையில் ஒரு தடாகத்தைத் தோண்டித் தன் பெயரை வைத்து அதில் முழுகிக்குமாரஸ்வாமியிடஞ்சென்று தோத் திரஞ் செய்து விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கிக் காவிரிதீர்த்தத்தில் முழுகிச் சீர்காழியிற்சென்றுசிவ பிரானுடைய கோயிலிற் புகுந்து விதிப்படி வணங்கித்தன் குறையைக் கூறி விஷ்ணுவினுடைய நகரத்திற்சென்று கோ யிலிற் புகுந்து தடாகத்தில் முழுகிச் சிவபெருமானை விதிப் படி பூஜித்து நமஸ்கரித்துக் குமாரசுவாமியினுடைய திரு வுருவைத் தந்தருளல் வேண்டுமென்று சிந்தித்துத் தோத் திரஞ் செய்கின்ற மயிலுக்குச் சிவபெருமான் மனமிரங்கிப் பார்வதியாரோடும் இடபாரூடராயெதிரில் வந்து உனது நாமம்புனைந்த மலையிற்போய்ச்சரவணப்பொய்கையிற் முழுகி நமது குமாரனை வழிபட்டுத் துதிக்கிலவன் உனக்குச்சாரூப் யத்தைத் தருவான் போவென்று திருவாய்மலர்ந்தருள மயி லதைக் கேட்டு நன்றென்று சந்தோஷமடைந்து வணங்கிச் சிவபிரானைத்துதித்துச் சுவாமீ இந்த க்ஷேத்திரமுமிலிங்க மும் அடியேனுடைய நாமத்தைப் பொருந்தல் வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய அவற்றைக் கொடுத்தருளி உன்னைப்போற் பின்னொருகாலத்தில் பார்வதி நம்மைப்பூஜி த்துத் தன் நாமத்தை யுனது நாமத்துக்கு முன்னாகச்சொல் லும்படி யொரு பெயரையிடுவாள். அந்நாளில் கௌரிமாயூ மெனச் சொல்வரென்று சிவபெருமான் கயிலையங்கிரியை அடைந்தார். மயில் மாயூரத்தில் வாழுஞ்சிவபெருமானை மூன்றுதடவை பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துத் தியா

னித்து அவ்விடம் விட்டு நீங்கி மயூரகிரியில் வந்து குமார சுவாமியை வணங்கித் துதித்து இனி அடியேன் செய்யும் பணியென்னவென்று விண்ணப்பஞ்செய்யக் குமாரசுவாமியும் அருளிச்செய்வார். விண்ணுலகிலிருக்கின்ற மயனை யழைத்து நமதுதிருவுருவத்தையுண்டாக்குவித்துப்பின் சத்திகளிருவரையும் பரிவார தேவதைகளையுமுண்டாக்குவித்து சுருதிஸ்மிருதிபுராணேதிஹாஸாகமங்களைக் கரைகண்ட சாம்பவனான ஆசாரியனை அழைத்து அவனுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவனைக்கொண்டு விதிப்படியே பிரதிட்டை செய்வித்துச் சூரியன் கும்பராசியைப் பொருந்தும் மாசிமாதத்தில் அச்சுவினி நக்ஷத்திரத்தில் துவஜாரோகணம் செய்வித்து ஆயிலியநக்ஷத்திரத்தில் ரதோற்சவம்செய்வித்து பூரணையில் வரும் மகநக்ஷத்திரத்தில் தீர்த்தோஸ்வமுஞ் செய்வித்துப் பின் நம்மிடம் வருக வென்றருளிச்செய்தார்.

உடனே மயில் மயனையழைத்துக் கோயிலையுஞ் செய்வித்து இருசத்திகளையும் குமாரசுவாமியையும் பரிவார தேவ தேவதைகளையுமுண்டாக்குவித்துத் துதித்துச் சுபதினத்திற் பிரதிட்டை செய்வித்துக் குமாரசுவாமியருளிச்செய்த படி திருவிழாவைக் கும்பமாதத்திற் செய்வித்துத் தேவர் புகழக் கந்தமலையிற் போய்க் குமாரசுவாமியின்றிருப்பாத கமலங்களையடைந்தது. இத்தன்மையாய் மயில் முத்தியை அடைந்ததென்று நாரதமுனிவருக்குப் பிர்ம்மாகூறினரென்று நைமிசாரண்ணிய வாசிகளுக்குச் சூதமுனிவர் கூறினர். இன்னமும் மயூரகிரியின் மேன்மையையருளிச்செய்க வென்று நாரதமுனிவர் கூற பிர்ம்மாகூறியருளினர். அதன்படியே சொல்லுவேனென்று சூதமுனிவர் சொல்வார். பூமிதேவி பாரத்தைச் சகிக்கமுடியாதவளாய் விஷ்ணுவிடத்திற் போய்ச்சொல்ல அவரும் வசுதேவருக்குத் தேவகியின் வயிற்றிற்கர்ப்போத்பத்தியாய்கிருஷ்ணனுகவவதரித்துவளர்ந்து

கஞ்சனோடு சிசுபாலன் முதலியோரை யுத்தகளத்தில் வதைத்து, உருக்குமணி முதலாகிய மனைவியர்களை மனமகிழப் புணர்ந்து பிரத்தியும்மன் முதலான வீரரைப்பெற்று விளங்கியிருந்தார். அந்த யுகத்திற்கு முன்னதாகிய திரேதாயுகத்தில் தசரதனுக்குப், புத்திரனுகவவதரித்துச் சீதையைச்சிறையில் வைத்தவிராவணனைச் சங்கரித்துச் சீதையுடன் மீண்டு அயோத்திமா நகரையடைந்தார். துவாபரயுகத்தில் அந்த கிருஷ்ணன் சிமந்தமணிக்காகப்பாதாளத்தையடைந்து சாம்பவனோடு யெதிர்த்துப் பின்யுத்தமின்றி இணங்கிச் சாம்பவதி என்பவளை விவாஹம்செய்து அச்சாம்பவதிக்குப் புத்திரனில்லாமையால் மனம் வருந்தி உபமன்னியு முனிவரையடைந்து எனது வருத்தத்தைத் தேவரீர் நீக்கியருளுக வென்று கூற முனிவரும் கிருஷ்ணனே பாண்டிநாட்டில் மயூரகிரியென்றொரு க்ஷேத்திரமிருக்கிறது. அம்மயூரகிரியில் போய் கார்த்திகையிலும், சுக்கிரவாரத்திலும், சட்டித்திதியிலும் விரதத்தைச்சாம்பவதியோடு அனுட்டித்துக்குமாரனைத் துதிக்கிற் புத்திரனவதரிப் பனென்று கூறலும் கிருஷ்ணன் விடைபெற்றுக்கொண்டு மயூரகிரியையடைந்து சரவணப் பொய்கையிற் ஸ்னானம்செய்து விரதங்களை அனுட்டித்து நாடோறும் மலையைப் பிரதக்ஷிணம் வந்து குமாரசுவாமியின்றிருவடிகளைத் துதித்து ஒரு மண்டலம் சாம்பவதியுடனிப்படியிருக்கச் சாம்பவதியின் வயிற்றிற் சாம்பனென்ற புதல்வனவதரித்தான். சாம்பவதியும் கிருஷ்ணனும் குமாரசுவாமியே தெய்வமென்று துதித்துப் பிராமணர் முதல் வேளாளர் வரை யளவிலாத குடிகளை யந்தந்தவிடங்களில் நின்று அழைப்பித்து அக்குடிகளுக்கு வீடுகளையுமுண்டாக்கி அட்டைசுவரியங்களையுங்கொடுத்து அவ்விடத்தில் பட்டணமொன்றையுண்டாக்கி விளங்கும்படிசெய்து துவாரகாபுரிக்குச் சென்றார். இவ்விரதங்களை யனுட்டித்த விசேடத்தினால்

முரனென்றவசுரனையும் சங்கரித்து முராரியென்ற நாமத்தையும் பெற்றார், இந்த நகரைக் கிருதயுகத்தில் மயூரமாபுரமென்றும், திரேதாயுகத்தில் அச்சுவத்தவனமென்றும், துவாபரயுகத்தில் கண்ணபுரமென்றும், கலியுகத்தில் மயூரகிரியென்றும் சொல்லும்படியிருக்குமென்று பிர்மா சொன்னார்.

மயூரம் முத்திபெற்ற சருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது
கார்த்திகை விரதமுறைத்த சருக்கம்.

விரதங்கள் மூன்றென்று அருளிச்செய்தீர். அவற்றை யனுட்டிக்கும் விதியை யருளிச்செய்கவென்று நாரதமுனிவர் வினவ வன்பினுல் பிர்ம்மா சொல்லுவார். முதலில் கார்த்திகை விரதத்தைச் சொல்லுவோம். தெய்வயானையம்மையாரும் வள்ளிநாயகியாரும் அனுட்டிக்கப்பெற்ற இக்கார்த்திகை விரதம் விரதங்களுளுத்தமமாம். அவ்விரதத்தை யுலகமீடேறும்படி சொல்லுவேன். முனிவனே கேளென்று பிர்ம்மா சொல்லுவார். ஆறு க்ஷேத்திரங்களிலும் இவ்விரதமனுட்டித்தால் நன்றும். அவ்வாறு க்ஷேத்திரங்களிலும் அனுட்டித்தலால் வரும் நல்லபலனென்று. மயூரகிரியிலனுட்டிக்கிற் கோடியாகும், அந்தக் கார்த்திகை விரதத்தைக் கார்த்திகை மாதத்துக்கார்த்திகைநக்ஷத்திரத்தில் மயூரகிரியிலாரம்பிக்கவேண்டும். சரவணப்பொய்கையில் ஸ்னானஞ்செய்துஇருசத்திகளுடனேகுமாரசுவாமியைத் தியானித்து, நித்யகருமங்களை முடித்து விபூதியுருத்திராக்கஞ் சரீரத்தில் விளங்கச் சடாட்சரத்தையுமுச்சரித்துப் போஜனத்தோடுநித்திரையில்லாமற்பகற்காலத்தைக்கழித்து இராக்காலத்தில் நியமங்களோடும் சங்கற்பத்தைச்செய்து

விநாயகக்கடவுளைப் பூஜித்துத் துதித்துத் தர்ப்பை சேர்ந்த பஞ்சகவ்வியத்தாற் சுத்திசெய்து கும்பத்திலாயினும் பிம்பத்திலாயினும் பூஜைசெய்க. "அப்பூசனைசெய்யும் விதம். ஆறுமுகங்களும், பதினெட்டுக்கண்களும் பன்னிரண்டுகரங்களும் சுவர்ணகிரீடத்தினழகும், வேல் தண்டு, அபயம், அம்பு, வாள், கொடி யென்றவாறு ஆயுதங்களைத்தாங்கும் வலத்திருக்கரங்களாறும் குலிசம், தாமரைப்பூ, சூலம், வில், வாதம், பரிசை, யாகியயிவைகளைத்தாங்குமிடத் திருக்கரங்களாறும் இரத்திநாபரணமும், வலப்பக்கத்தில் வள்ளிநாயகியாரும், இடப்பக்கத்தில்தெய்வநாயகியாரும்விளங்குதலுமாகப் பாவனைப்பண்ணி ஆவாகனஞ்செய்து சிங்காசனங்கொடுத்து ஆசமனமர்க்கியம் முதலியதைக் கொடுத்துப் பின்பு பஞ்சாமிருதம், பஞ்சகவ்யம், பழம், தேன், பனிநீர் புட்பமிட்ட நீர், ஆகியவற்றை விதிப்படி யபிடேகஞ் செய்து பட்டுவஸ்திரம் சாத்தி, உபவீதத்தைச் சேர்த்தி இரத்திநாபரணத்தையும் சந்தனத்தையும், சேர்த்தி அட்சதையுங்கொடுத்து பூமாலையைச் சூட்டிப் பாதம் முதல் சிரம் வரைக்கும் மந்திரத்தைச் சொல்லி அங்கபூஜையை விதிப்படி செய்து திருநாமங்களைச் சொல்லியருச்சித்துப் பின்பு பீடத்தில் கார்த்திகைப் பெண்களறுவரைத் தியானித்து ஆவாகனஞ்செய்து ஆறிடத்திற் வைத்துப் பூஜித்துப் பின்பு ஆயிரந்திருநாமங்களையோதி வரங்களைத் தரும்படியாகத் தாமரை மலரால் முருகக்கடவுளை யருச்சித்துத்தூபதீபங்கொடுத்து அன்னத்தை நிவேதித்து ஜலங்கொடுத்துத் தாம்பூலங்கொடுத்து முருகக்கடவுளைப் பிரதக்ஷிணமாய் வந்து நமஸ்கரித்துப் புட்பாஞ்சலிசெய்து இரக்ஷித்தருளுகவென்று கையினால்மூன்று தடவையர்க்கியங் கொடுத்து வேழையேனுய்யும்படி வேண்டிய பலனையெல்லாம் தந்தருளகவென்று வரங்களை வேண்டுக. இவ்வாறு விரதத்தை முடிக்குக. இவ்வாறு செய்ய

வலிமையில்லாதவர்கள் அன்பினால் தம்மாலியன்ற மட்டி லும் அனுட்டிக்க. இவ்விதமனுட்டித்தோர் நோயும் பகை வாறப் பயமுமின்றி செல்வத்தோடின்பமுமடைவர். புதல் வனே கார்த்திகை விரதபலனைச் சுருக்கிச் சொன்னேன். விரித்துச் சொல்லுதலென்னுற் கூடாது. குமாரசுவாமியே சொல்லியருளுதல் வேண்டும். இவ்விதப்பெருமை வாய்ந்த விரதமஹிமையைப் பேசினோர்கள் குமாரசுவாமியின் பாத கமலங்களை யடைவர். கார்த்திகை விரதத்தை யனுட்டிக்கு நியமம் நான்கு வகைப்படும். வாழ்நாள் வரைக்கும். அல்லது ஆறு வருடம், அல்லது மூன்று வருடம், அல்லது ஒருவரு டம், ஆகும். அனுட்டிப்பவர் உத்தியாபனத்தை விதிப்படி செய்தல் வேண்டும். உத்யாபனவிதியெப்படியென்றால் இரு பது காசெடையுள்ள பொன் உத்தமம் பத்துக் காசெடை யுள்ளபொன்மத்திமம். ஆறுகாசெடையுள்ளபொன் அதமம். இயல்பில்லாதவர் யெவ்வளவிலாயினுந்த கட்டைச் செய்து அந்தத்தகட்டிற் குமாரசுவாமியின்திருவுருவை யிருசத்திக ளுடனெழுதிச் சிறு தகடு பதினாறிற் குமாரசுவாமியின் பதி னாறு திருவுருவையும் எழுதி நீரை யொருபொழுதுண்டு பூமி யில் நித்திரை செய்து பின் நித்திரை விட்டெழுந்து காலைக் கடங்களை முடித்தபின்பு சிவபுராணங்களைக் கேட்டுச் சூரி யாஸ்தமயமானபின் நீரில் முழுகி வத்திரந்தரித்து விபூதி யை விதிப்படியணிந்து ஆலயம், குருவினது வீடு, தன்வீடு, ஆகிய யிவற்றிலியன்றவிடத்திற் பதினாறு கால்களையுடைய மண்டபத்தையுண்டாக்கி நடுவிலொருவேதிகையைச்செய்து கண்ணாடிக்கு நிகராகவலங்காரஞ் செய்து ஈசானதிக்கிலாயி னுமதற்கெதிரிலாயினுமொரு குண்டத்தைச் செய்து ஆசா ரியனைக்கொண்டு சங்கற்பஞ் செய்வித்து அதிலரிசியையும் எள்ளையும்பரப்பிநீரையுடைய கும்பத்தையதன்மீதுவைத்துச் சந்தனஞ் சாத்தி மாவிலை தருப்பை வத்திரம் தேங்காய் இவ

ற்றை நடுவில் வைத்துச் சுப்பிரமணியப் பெருமானது கும்பத்தைச்சுற்றிக் கார்த்திகைப் பெண்களுக்கு ஆறு கும்பங்களையும் கலாகும்பத்தையும் மேற்குப்பக்கத்தில் மயூரகும்பத்தையும் வைத்து அலங்கரித்துப் பொற்றகட்டில் தேவர்களை யாவாகனஞ் செய்து கும்பத்தில் வைத்து விதிப்படி குமாரசுவாமியை யாவாகனஞ்செய்து குமாரகாயத்திரியினற் பூஜையைச் செய்து முடிக்கக் கார்த்திகைப் பெண்களையும் பூஜைசெய்து முடிக்க. மயிலை மயூரகாயத்திரியினற்பூஜித்துப் பிராமணரைக்கொண்டு கும்பத்தின்மேற்கையை வைப்பித்துக் குமாரசுவாமியினது மந்திரத்தை நூற்றெட்டுத் தரஞ்சொல்லச் செய்து விஷ்ணுவையும் சிவபெருமானையுமவ்வவர்க்குச் சொல்லப்பட்ட மந்திரங்களால் ஜபித்து அக்கினியை வளர்த்து நான்கு யாமத்திலும் கந்தசுவாமியினுடைய மந்திரத்தை யுச்சரித்து ஓமஞ் செய்க. கார்த்திகை நக்ஷத்திரத்திரத்திற்குஞ் சொல்லப்பட்டவாறு ஓமங்களைச் செய்க. பின்பு இராக்கழியும் வரை நித்திரையில்லாமற் வைகறைக் காலத்தில் ஸ்நானஞ் செய்து நித்திய கருமங்களை முடித்துப்பின்பு பூஜையைச் சென்ற நாள்போலச் செய்து பூர்ணாகுதியைச் செய்து கும்பநீரால் முழுகி வத்திரந்தரித்துப் பொற்றகட்டையும் கும்பத்தையும் ஆசாரியனுக்கும் பிராமணர்களுக்கும் கொடுத்து யானை குதிரை பசு பொன் பூமி முதலியவற்றையுந் தானஞ்செய்து இவ்வாறுயுத்தியாபனத்தைச்செய்து முடித்துப் பிராமணர்களுக்கு அன்னதானஞ் செய்து சுற்றத்தார்பிள்ளைகளுடனே போஜனஞ்செய்யவேண்டும். இந்த விரதத்தைச் சொன்னவிதிப்படி அனுட்டித்தோர் வேண்டியவற்றை பெற்று வாழ்ந்திருந்து அந்தியகாலத்தில் குமாரசுவாமிபிரணவத்தை வலச்செவியிலுபதேசிக்க மோக்ஷத்தையடைவரென்றுபிர்ம்மாநாரதமுனிவருக்குச்சொல்லியருளினர்

கார்த்திகை விரதமுறைத்த சருக்கம் முற்றிற்று.

ஆறுவது
சுக்கிரவார விரதமுறைத்த சருக்கம்.

நாரதமுனிவர் சுக்கிரவார விரதத்தையருளிச் செய்க வென்று விண்ணப்பஞ் செய்தலும், பிர்ம்மா அருளிச்செய்வார். சுக்கிரவார விரதமனுட்டிப்பதற்குப் பன்னிருமாதங்களாகும். ஒரு மாஸத்தில் பூர்வபக்ஷ குருவாரத்தில் ஒரு கால போஜனத்துடனிருந்து பிராமணர்களுக்கு அன்னதானஞ் செய்து சுக்கிரவார விரதமனுட்டிக்கும்படி யாரம்பித்தேன் நிர்விக்னமாய்முடியவேண்டுமென்று கூறிப்பிராமணர்களிடம் வேண்டிக்கொண்டு பூமியில் நித்திரைசெய்து வைகறைக் காலத்திலெழுந்து நீரில முழுகி நித்தியகருமங்களை முடித்துப் பின்பு குமாரசுவாமியை விதிப்படி பூஜித்து வரங்களை நினைந்து வேண்டுக. போஜனம் செய்ய நினைத்தால் நிவேதனஞ் செய்து உண்க. பூமியில் நித்திரை செய்தெழுந்து மற்றைநாளில் பாராயணம் செய்தல்வேண்டும். ஆறு வருடம் நன்றும். அல்லது ஒருவருடமானாலும் சரி. அந்தந்த வருடமுடிவில் வருகின்ற மாதத்தில் பூர்வபக்ஷ சுக்கிரவாரத்தில் நித்திரை நீங்கி முழுகி நித்திய கருமங்களை முடித்து இருபதுபலம், பத்துப்பலம், ஐந்துபலம், என்னும் நிறை பொருந்திய பொன்னினாற்றகட்டைச் செய்து அந்தத்தகட்டிற் குமாரசுவாமியினது ஒரு முகமும், இரண்டுகரங்களும் இரண்டுகண்களுமுடைய திருவுருவாக மாதாவின் மடித்தலத்தின் மீதிருப்பதாகவுமெழுதி ஒன்பது பிராமணர்களையழைத்து ஒன்பது கும்பங்கள்வைத்து யதில் பிராமணர்களை வரித்து வத்திரந் தேங்காயிவற்றைச்சேர்த்தி விநாயகரைப் பூஜித்து வணங்கித் தகட்டைப்பஞ்சகவ்யத்தாற் சுத்திசெய்து குமாரசுவாமியை விதிப்படி பூஜித்து, அட்டதிக்குப் பாலர்களையும் அவரவர்க்குறிய மந்திரத்தாற் பூஜித்துக் கும்பஜபம் செய்து முடித்தபின்னர் குமாரசுவாமி

னுடைய மந்திரத்தை நூற்றெட்டுத் தடவை சொல்லி மேற்குத் திசையில் அக்கினியையுண்டாக்கி நெய்யையாகுதி செய்து திக்குப்பாலகர்களுடைய மந்திரத்தால் பத்து ஓமத்தைச் செய்து அதன் பின் அடியேனுக்கருள்புரிகவெனச் சொல்லி மூன்று அருக்கியங்கொடுத்து அத்தினமுழுதும் உபவாசியாக நித்திரையின்றியிருந்து மறுநாளெழுந்து நித்திய கருமத்தை முடித்துப் பின் பூஜையைச் செய்து கும்ப ஜலத்தில் முழுகி வத்திரமணிந்து விபூதி உருத்திராக்ஷமணியணிந்து கும்பத்தில் வரிக்கப்பட்டிருந்த பிராமணர்களுக்கு பொற்றகடு வத்திரம் குடம் திரவியம் முதலானவற்றைக் கொடுத்து அதன் பின் தம்பதிகளுக்குப்பூஜைசெய்து பிராமணர்களுக்கு அன்னதானம் செய்வித்துப் பிதா மாதா மனைவி சுற்றத்தார்பிள்ளைகளுடன் போஜனஞ்செய்யவேண்டும். இப்படிச் சுக்கிரவார விரதத்தை அனுட்டித்தோர் இம்மையிற் போகங்களை யனுபவித்து மறுமையிற் குமாரசுவாமியின் திருவடிகளை யடைவர்.

சுக்கிரவார விரதமுறைத்த சருக்கம் முற்றிற்று.

ஏழாவது

ஷஷ்டிவிரதமுறைத்த சருக்கம்.

கந்தஷஷ்டி விரதத்தையருளிச் செய்கவென்று நாரத முனிவர் வினவ, பிர்மாவும் சொல்வாராயினர். ஐப்பசி, கார்த்திகை, தை, பங்குனி, சித்திரை, வைகாசி இந்தவாறு மாதங்களிலும் கந்தஷஷ்டி விரதமாரம்பிக்கலாம். இம்மாதங்களுளொரு மாதத்திற் பூர்வபக்ஷத்து ஷஷ்டிக்கு முதனுள் ஒருகால அன்னம் புஜித்து பிராமணர்களுக்கன்னதானஞ் செய்து பிராமணருடையவனுக்ஞையைப்பெற்று அத்தினத்தைக் கழித்து மற்றை நாளின் வைகறைக்காலத்தில் நித்தி

ரை விட்டெழுந்து நீரில் முழுகி நித்தியகருமங்களை முடித்து விநாயகக்கடவுளைப் பூஜித்துப் பசிய பொன்னூர் செய்யப் பட்ட துவாரபாலகரைப் பூஜித்துக் கும்பம், பிம்பம், யந்தி ரம் யென்ற மூன்றிடத்துள்ளும் ஓரிடத்திற் குமாரசுவாமி யை விதிப்படி பூஜை செய்க. பூஜை செய்யும் விதம். எட் டுப் பொற்கும்பங்களைச் சுற்றி வைத்துப்பசிய பொன்னாற் செய்யப்பட்ட நாயககும்பத்தை நடுவில் வைத்து ஒருமுகமு மிரண்டுகண்களும் குலிசம் வேல் வரதம் அபயமிவைகளு டன் கூடிய நான்குகரங்களும், வள்ளிநாயகியாரும், தேவ நாயகியாருமிருபக்கமுமிருக்கவும் மயிலின் மீதேறுந்தன் மையாய்ப் பாவனை செய்து பிரதானமான மூன்று கும்பத் திலாவாகித்துப் பின்பு ஒருமுகமும் தாமரை சேவற்கொடி வேல் அபயம் இவைகளையுடைய நான்கு கரங்களும், இரத் தின கிரீடமும் மாலையும் விளங்கும் பளிங்கு வடிவமாகவும், பின்பு ஒரு முகமுமிரண்டுகரங்களிற் புத்தகமும் ஞானமுத் திரையும் உடையதாகவும் பொன்னையொத்த வடிவமாகவும் பின்பு ஆறுமுகமும் வில்லும் அம்புந்தாங்கிய பன்னிரண்டு கரங்களும் பொருந்திய நீலநிறத் திருமேனியாகவும் பின்பு ஒரு முகமும், வரதம் அபயம் குலிசம் வேல் இவற்றைத் தாங்கிய நான்குகரங்களும் சந்திர காந்தி வத்திரஉடையும் இலக்ஷணமமைந்ததிருமேனியாகவும் பின்பு ஆறுமுகங்களும் ஆயுதங்களால் விளங்குகின்ற பன்னிரண்டுகரங்களுமுடைய பால்போன்ற திருமேனியாகவும், பின்பு ஒரு முகமும், நான்கு கரங்களில் வேல், வரதம், அபயம், குலிசம் இவைக ளுடன் கூடிய கோடிசூரியப் பிரகாசம்போல் விளங்குங்காந் தியையுடைய திருமேனியாகவும் இவ்வாறு ஆறு குமாரர்க ளையும் ஈசானதிசை முதலாக மேற்கிலும் கிழக்குதிசையிலும் வைக்கப்பட்ட கும்பமாறிலும் தியானித்து ஆவாகித்து முத் திரை கொடுத்து ஆசனங்கொடுத்து எழுந்தருளியிருக்கவெ

ன்று கூறி அர்க்கியம் பாத்யாசமனமிவற்றைக்கொடுத்துப் பஞ்சாமிருதம், பஞ்சகவ்யம், பழங்கள், தேன், இளநீர், புட்பமிட்ட நீர், பனிநீர், இவற்றாலபிடேகஞ் செய்து பட்டு வத்திரம்சாத்தி உபவீதத்தையுஞ் சந்தனத்தையும் சாத்தி அட்சதைகொடுத்து புட்பங்களைச்சாத்தி, சிரம்முதல் பாதம் வரைக்கும் பூஜை செய்து தூபதீபங்காட்டி அன்னத்தை நிவேதித்து நல்ல நீரைக்கொடுத்து வெற்றிலைப்பாக்குக் கொடுத்து கற்பூரம் பார்த்துப் புட்பாஞ்சலி செய்து அவரவர்க்குப் பிரியமான பழம், பால், மிளகு, மா முதலியவற்றை நிவேதித்து உண்க. பூமியிற்படுத்து மற்றைநாளிற் பிராமணர்களுக்கு அன்னதானஞ்செய்து பாரணை செய்யவேணும். இவ்வாறு செய்தல் ஷஷ்டிவிரத விதியாம். இவ்விரதத்தை அனுட்டித்தவர்இம்மையில்வேண்டியதைப்பெற்று மறுமையிற் கந்த லோகத்தையடைவர். விரதவுத்தியாபன விதியைச் சொல்வோம். நியமித்த வருடத்தின் முடிவில் அத்தினத்தின் வைகறைக்காலத்தில் நித்திரைவிட்டெழுந்து சரவணப்பொய்கையிற் முழுகி காலைக்கடனை முடித்து ஆறு குமாரர்களை யிருசத்திகளுடன் பொற்றகட்டிலெழுதிமாலைக் காலத்திலொரு மண்டபத்தை யியற்றி ஆசாரியனோடு ஆறு பேரை யழைத்து விநாயகரைப் பூஜித்துச் சங்கற்பஞ்செய்து நெல்லரிசியைப் பரப்பியதின்மேற்குமாரசுவாமியின் கும்பத்தைத் தாபித்து யிருசத்திகளின் கும்பங்களை யிருபக்கத்திலும் வைத்து ஆறு கும்பங்களைக் கிழக்குமேற்காக வைத்து வத்திரம் முதலியவற்றைச்சாத்தித் தென்பக்கத்திலரிசியைப் பரப்பி யதில் ரேகைகளைத் தெற்கு வடக்காக நான்கும் கிழக்கு மேற்காக நான்குங் கீறினால் பெருமையான வொன்பது வீடாகும். குமாரசுவாமியின் திருவுருவை நடு வீட்டில் வைத்து யிருசத்திகளின்றகட்டைப் பக்கத்திற் வைத்து ஆறு குமாரர்களின் றிருவுருவங்களை ஈசானதிசை முதல்

வாயு திசைவரைக்குந் திசைகளில் வைத்து நாயக கும்பத்தினிடப் பக்கத்தில் ஷட்கோணத்துக்கு மத்தியில் ஒருவனையமியற்றிப் பிரணவத்தோடு ஷடாக்ஷரத்தையுமெழுதி தினைமாவிளக்கையும் வைத்து ஆறு குமாரரை விதிப்படி பூஜித்து வில்வத்தினால் ஆயிரந்திருநாமங்களைச் சொல்லி, நான்கு யாமங்களிலுமர்ச்சித்துக் குமாரசுவாமியின் மந்திரத்தையுமுச்சரித்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துத்துதித்து அருள் புரிகவென்று அர்க்கியத்தைக் கொடுத்து இருசத்திகளுக்குமர்க்கியங்கொடுத்து ஈசானதிசையில் ஓமகுண்டத்தையுண்டாக்கி ஓமஞ்செய்து பூரணாகுதியை முடித்து மற்றைநாளில் நித்தியகருமத்தை முடித்துக் கும்பஜலத்தில் ஸ்நானஞ் செய்து கிரீக்ஷண தானஞ்செய்து ஆசாரியனோடு ஆறுபிராமணருக்குப் பொற்றகடு பூமிமுதலியதைத் தானஞ்செய்து தம்பதிபூஜை செய்து. பிராமணருக்குக்கன்னதானஞ்செய்து இவ்விதம் உத்தியாபனத்தைச் செய்து பந்துக்களோடு போஜனம் செய்யவேண்டும். இவ்விதமநுட்டித்தோர் குமாரசுவாமியின் பதவியிற் சேறுவர். இந்த விரதத்தை இந்திரன் விஷ்ணு, அர்ச்சுனன் முதலியவர்களனுட்டித்து வேண்டியதைப் பெற்றார்களென்று பிர்ம்மா கூற நாரதமுனிவர் அக்குமாரசுவாமியைப் பூஜித்தவர் யாவரென்று வினவ பிர்ம்மா சொல்லுவார்.

ஷஷ்டிவிரதமுறைத்த சருக்கம் முற்றிற்று.

எட்டாவது
அகத்தியச் சருக்கம்

அகத்தியமுனிவன் மயூரகிரியின் சரித்திரத்தையறியாதவனைச் சிவபெருமானைச் சோமாஸ்கந்த மூர்த்தமாய் மனத்திற் தியானிக்க முன்வந்து தோன்றினார். அகத்தியமுனிவன் நமஸ்கரித்துத்தோத்திரம் செய்யச்சிவபெருமானுனக்கு

வேண்டியதென்னவென்று வருளிச்செய்ய முனிவனும் மஹாதேவனே சுப்பிரமணியருடைய தலங்களுள் முக்கியமானதாயும் சீக்கிரத்திற் பலனைத்தரத்தகுந்ததாயும் விசேஷமகிமையுள்ளதாயுமிருக்கிற தலமெது. காலங்களுக்குள்ளேயவருடைய தரிசனத்துக்கு யோக்யமான காலமெது? கந்தவஸ்துக்களுள் பிரியமானதெது. அன்னங்களுக்குள்ளே பிரியமானது எது. பக்ஷியங்களுள்முக்கியமானதெது. வத்திரங்களுள் பிரீதியுள்ளது எது. புட்பங்களுள் பிரீதியுள்ளது எது. மலைகளுக்குள் விசேஷமுடைத்தாய் மயூரகியில்வீற்றிருப்பதென்ன. இவைகளைவிஸ்தரித்துச்சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். சிவபெருமானும் முனிவனே நமது குமாரனது வாகனமாகிய மயிலானது தான் செய்த அபராதத்தாற் பருவதரூபமாகிய சாபத்தையடைந்து நமது குமாரனை வணங்கிச் சாபவிமோசனம் தந்து மறுபடியும் என்னை வாகனமாகக்கொள்ளல் வேண்டுமென்று பிரார்த்தித்துநிற்கக், குமாரனும் நீ கருமபூமியிலே பாண்டியநாட்டின் கண்ணாரசவனத்திலே மலையாயிரு. நாம் உலகோபத்திரவத்தைச் செய்கின்ற வசுரர்களாகிய சூராதியரைச் சங்கரித்து அவ்விடத்தில்வந்து சாபவிமோசனஞ்செய்து உன்னை வாகனமாக்கிக்கொள்வோமென்று அருளிச்செய்ய மயில் மலைவடிவமாகுதலும் நமது குமாரன் அறுமுகவடிவையுடையவனுகவவதரித்துச் சூரனை வதைத்து மயூரகிரியில் வந்து மயிலையனுக்கிரஹித்துப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறுன். யாம்முன்னுண்டாக்கிக் கொடுத்தலினுல் மயில் விசேஷித்தது அதுபற்றி மயூரகிரியும் விசேடித்தது. அதுபற்றி நமது குமாரனும் அங்கேயிருந்து விரும்பியவர்க்கு வேண்டிய பலனை விரைவிற் கொடுக்கிறுன். படைவீடுகளிற் மயூரகிரி விசேஷமுள்ளது. கார்த்திகை மாதத்திற் கிருத்திகா நக்ஷத்திரமானது அவனுடைய தரிசனத்துக்கு முக்கியம், கந்தவஸ்துக்களுள் பச்சைகற்பூரம் முக்கியம், அன்னங்களுக்

குள் வெண்பொங்கல் முக்கியம். பக்ஷியங்களுக்குள் வடை முக்கியம். வஸ்திரங்களுக்குள் வெண்மை வத்திரம் முக்கியம் புஷ்பங்களுக்குள் தாமரை மலர் முக்கியமென்று திருவாய் மலர்ந்தருளிச் சிவபெருமான் கயிலையங்கிரியையடைந்தார். பின்பு அகத்தியமுனிவன் சமுசயநிவர்த்தியாகி மயூரகிரியை யடைந்து விதிப்படி ஷண்முகநாதரைப் பூஜித்துத் தேவரீருடைய பாதகமலங்களையே விரும்பினேன் தருதல் வேண்டுமென்று வணங்கித்துதித்துக்கிருபையைப்பெற்றும் மயூரகிரியின்சூழ்வரையிலிருக்கிற ஸ்வயம்பு லிங்கத்தைத்தரிசித்து மயூரகிரியின் வடதிசையிலிரண்டு குரோசத்திற் சிவலிங்கத்தைப் பிரதிட்டைபண்ணி தியானமாவாகன முதலியவற்றைச் செய்து இனியதேனாலபிடேகஞ்செய்து நிவேதன முதலியவற்றையுஞ் செய்து புடபங்களாலருச்சித்துத்துதித்து நமஸ்கரித்துப்பிரார்த்திக்க முனிவனபிஷேகித்த தேன் பூமியின் மீது ஒரு நதியாய்ப் பிரவகித்தமையாலது முதலந்த நதி தேனாறென்று வழங்கப்பெற்று வருகிறது. பின்பு முனிவனும் மறுபடியும் மயூரகிரியிற் வந்து குமாரசுவாமியை நமஸ்கரித்துப் பொதிய கிரியிற் சேர்ந்தான்.

அகத்தியச் சருக்க முற்றிற்று.

ஒன்பதாவது
வசிட்டர் கதையும்விசுவாமித்திரர் கதையுமுறைத்தசருக்கம்.

நாரதமுனிவனே வசிட்டமுனிவன் செய்த பூஜையைச் சொல்வோமென்று பிர்ம்மா சொல்லுகிறார். வசிட்டமுனிவன் பூமியில் வந்து அரியதவத்தைச் செய்யும்பொழுது காதிமகாராஜனுடைய குமாரனை கௌசிகன் அந்த வனத்தில் வந்து வேட்டையாடி மெலிவடைந்து வசிட்ட முனிவ

னுடைய கால்களில் விழுந்து நமஸ்கரித்தான். அப்பொழுது வசிட்டமுனிவனும்ஆசனங்கொடுத்துவிருக்கச்செய்து நீரால் தாகத்தை நீக்கும்படிசெய்து நெய் தயிர் முதலியதுடன் போஜனஞ்செய்துவைத்தான். கௌசிகனுமாச்சரியமுற்று தவச்செய்கையே நலமென்று கருதிச் சேனைகளை நாட்டிற்கனுப்பி இராஜதர்மம் பெரிதல்லவென்று அன்று முதல் வனத்தையடைந்து ஒரு நேரமுண்ணுதல் தண்ணீரைப் பருகுதல் சருகைப்புஜித்தல் வாயுவையுண்ணலிவற்றை முறையே செய்து பிராணவாயுவைத் தம்பிக்கச்செய்து நிருவிகற்பசமாதியிலிருந்தான். நாமவ்விடத்தில் வெளிப்பட்டுக் கௌசிகனே! பேறிவையுடைய முனிவனாய் நிகாற்றாய். யாவருனக்கொப்பாவாரென்று கூறிப்போயினோம். அன்று முதல் பெரிய முனிவனாயிருந்தான். அந்நாளிற் றிரிசங்குராஜன் வசிட்டமுனிவனை யடைந்து பாதங்களில் நமஸ்கரித்துக் குருவே இவ்வுலகத்திலுள்ள போகங்களையெல்லாம் யிம்மானுட சரீரத்தோடு சுவர்க்கத்திலனுபவித்தல் வேண்டுமென்று கூறுதலும் முனிவனும் மானுடர்கள் சுவர்க்கத்தையடைந்து போகங்களை அனுபவிக்க விரும்பினால் தேவர்களாக வடிவமாறி யனுபவித்தல் வேண்டும். மானுடராகப் போதல் கூடாது. போனால் தேவர்கள் மானுடரை யின்பமனுபவிக்க விடார்கள். சரீரம் மாறுவதும், ஆயுளுடைய வந்தத்திலன்றிச் சுயேச்சையினாற் கூடாது. அரசனே இன்னும் நெடுங்காலம் வாழ்ந்து வெண்ணியதை முடிக்கவென்று கூற அதைக்கேட்ட திரிசங்குவும் வேறு உபாயமென்னவென்று பாதங்களில் நமஸ்கரித்தான். உடனே முனிவனும் உலகநடைதவராதபடி கூறியவாக்கை நன்மையென்று அங்கீகரித்தாயில்லை என்றுகூற அவ்விடத்தினின்று நீங்கி விசுவாமித்திர முனிவனிடம் போய் நமஸ்கரித்துத் தான் வந்தமையைக் கூற முனிவனும் நீ இந்தச்சரீ

ரத்தோடு சுவர்க்கத்திற்குப் போகும்படி நான் யாகத்தைச் செய்வேன் நீ வருத்தமடைய வேண்டாமென்று முனிவர்களை யழைத்தான். அனைவரும் வந்தார்கள். வசிட்டமுனிவனுடைய புதல்வர்கள் தூஷித்துக்கொண்டு யவ்விடத்தில் வந்தார்கள். அப்புதல்வர்களைநீசத்துவத்தையடைந்துகாமம் மிகவுழல்கவென்றுசாபமிட்டான். கௌசிகமுனிவன்சபித்த படியே காமம்மேற்பட்டு உழலுதலும் அப்புதல்வரை வசிட்ட முனிவன் பார்த்து வருந்திப் புதல்வரே உங்களுக்கிவ்வாறு பொருந்தியதென்ன. நானுமிறப்பேனென்று சித்தப்பிரமையை யடைந்து கடலிற் புகுந்து வுயிரை நீக்கும்படி யெண்ணிக் கடலின் கரையையடைந்து நின்றான். அவ்விடத்தில் யாஞ்சென்று அவரவர் செய்த வினைப்பயன்களை வவரவரே யனுபவிக்கவேண்டும். கோபத்துடன் சாபமிட்டோர் முடிவைக்கூறாதயிந்தக்கருமமனுபவித்தேயாகவேண்டும். நீ இந்தச் சோகம் நீங்கும்பொருட்டுப் பாண்டிநாட்டிற் குமாரசுவாமி எழுந்தருளியிருக்கும் மயூரகிரியிற்போய் அவரை வழிபட்டால் உன் வருத்தத்தை நீக்குவரென்று கூற வசிட்டமுனிவனும் புதல்வரோடுமயூரகிரியையடைந்து சரவணப்பொய்கையிற் முழுகி விபூதி ருத்திராக்ஷமணிந்து ஷடாக்ஷரத்தைத் தியானித்து மலைமேலே போய்க் குமாரசுவாமியை விதிப்படி பூஜித்து யென்று யரைத் தேவரீர் நீக்கியருளுகவென்று விண்ணப்பம் செய்யக் குமாரசுவாமி யசரீரி வாக்கால் முனிவனே உனது புதல்வர்கள் சாபம் நீங்கியிருப்பார்கள் போய்ப்பார்த்து வருத்தந்திறுவென்று அருளிச் செய்ய முனிவனும் நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு சாபம் நீங்கின புதல்வர்களோடு தன் இருப்பிடம்சேர்ந்தான். "நாரதமுனிவனே வசிட்ட முனிவனுடைய சரித்திரத்தைக் கூறினோம். இனிமேல் விசுவாமித்திரன் பூசனையைச் சொல்லுவோம். பிற்பாடு விசுவாமித்திரமுனிவன்

யாகத்தைச் செய்து திரிசங்கு ராஜனைச் சுவர்க்கத்திற்க னுப்பி பிற்பாடு முனிவன் தத்துவக்ஞானத்தை அடைய வேண்டி இமையமலையிற் பரமசிவனைக் குறித்துத் தபசு செய்யப் பரமசிவன் அவன்றபசைக்கண்டு மகிழ்ந்து இடபா ரூடராய்ப் பார்வதியாரோடு முனிவனுக்கு நேரிலெழுந்த ருளி வந்து காக்ஷிகொடுக்க முனிவனும் புட்பங்களைச் சொ ரிந்து நமஸ்கரித்துத் தேவரீருடைய வானந்தக்கடலின்கண் ணமிழ்ந்த மனத்திற்கருதினேனென்று விண்ணப்பம்செய்த லும் சிவபெருமான் வசிட்டமுனிவனது புதல்வர்களுக்குக் கொடிய சாபம் கூறிய தீமையுன்னிடமிருக்கிறது. அதை நீக்கி யுனக்கு ஞானத்தையுபதேசித்தல் வேண்டும். அதற்கு நீ பாண்டிநாட்டில் மயூரகிரியென்று தலமிருக்கிறது. அங்கு போய் நமது குமாரனைப் பூஜித்துத் துதித்தால் அவன் உன் னுடைய பாவத்தை நீக்கி ஞானத்தையும் உபதேசிப்பன் போவென்று அருளிச்செய்து சிவபெருமான் கயிலையங்கிரி யை யடைந்தார். கௌசிகமுனிவனும் அவ்விதமே மயூரகிரி யையடைந்து சரவணப்பொய்கையில் முழுகி கிரியைப் பிர தக்ஷிணம் செய்து மலையின்மேல் சென்று குமாரசுவாமிக்கு அபிடேகம்செய்து விதிப்படி பூஜித்துத்துதித்து வடியேனைக் காத்தருளுகவென்று நமஸ்கரித்தலும் குமாரசுவாமி முனிவ னுக்கு அறுமுகங்களோடு வெளிப்பட்டு வேண்டியவற்றை விண்ணப்பஞ்செய்கவென்று வருளிச்செய்ய முனிவனும் அடியேன் செய்த பாவ நீங்குதல் வேண்டும். மெஞ்ஞா னத்தைப் பெறுதல் வேண்டுமிவற்றை யருளுகவென்று விண்ணப்பஞ்செய்யக்குமாரசுவாமியும் முனிவனே யெனது க்ஷேத்திரத்திலென்று வந்தனையோ அன்றைக்கே பாவ முன்னை விட்டுக்கழிந்து போயிற்றென்று திவ்யக்ஞானத் தை உபதேசித்தார். முனிவன் சந்தோஷமுற்று நமஸ்க

ரித்து விடைபெற்று அஞ்ஞான நீங்கி நிர்மலராய்ப் பிரகாசித்துத் தன்னிருப்பிடஞ் சேர்ந்தான்".

வசிட்டர்கதையும் விசுவாமித்திரர் கதையுமுறைத்த சருக்கம் முற்றிற்று.

பத்தாவது

பிர்ம்மாவின்கதையும் கருடேசன் கதையுமுறைத்தசுருக்கம்.

நாரதமுனிவனே கௌசிகன் கதையைச் சொன்னோம். இனி முன்னொருகாலத்தில் மயூரகிரியிற் குமாரசுவாமியை யான் பூஜித்தேனதைச் சொல்வேனென்று பிர்ம்மா சொல்வாராயினர். யான் வைகுண்டத்தையடைந்து விஷ்ணுவின் முன்னே உலகமனைத்தயுஞ் சிருட்டித்து யுன்னையுஞ் சிருட்டித்துக் காத்தேனுகையால் யென்னைத்துதித்துக் கொண்டு பாற்கடலிலிருப்பாயாக வென்று சொன்னேன். விஷ்ணுவும் மூடரைப்போலப் பேசினாய். பொருத்தோ மிவ்விடத்தை விட்டுப்போ வென்றார். திரும்பவுமளவில்லாததைச் சொன்னேன். அவரும் சில வசனங்களைக் கூறினர். இவ்வாறு நானீசுவரனீசுவா னென்றொருவர்க்கொருவர் போரைச்செய்து பூமியில் வந்தோ மக்காலத்தி லந்தக்கலகத்தை நிவர்த்திக்க விருவர்களுடைய மத்தியிற் சிவபெருமான் அக்கினித்தம்பமாகத்தோன்றி யெங்களைப்பார்த்து அசரீரிவாக்காலிந்தத் தம்பத்தின் அடியையும் முடியையு மெவர் காண்பரோ. அவரே யீசுவரனென்று திருவாய் மலர்ந்தருள, முடிய்ய நானும் அடியை விஷ்ணுவும் காண்போமென்று உடன்பட்டு விஷ்ணு பன்றி வடிவங்கொண்டு பூமியைக் குடைந்து பாதலத்திற்போய்த் தேடிக்காணமற் றிரும்பினர். யான் அன்னவடிவங்கொண்டு பறந்து அண்டகடாகத்தையுந் தாண்டிப்பார்த்துங் காணமலந்தவக்கினித் தம்பத்தினடி

யில் யானும், விஷ்ணுவும் வந்துசேர்ந்து நேரில் முடியைக் கண்டேனென்று பொய்யைச் சொன்னேன். அடியைக் காணவில்லையென்று விஷ்ணு மெய்யைச் சொன்னார். சிவ பெருமான் விஷ்ணுவை நம்மைப்போலுன்னையு முலகம் பூஜையைத் தவறாது செய்க. பிரமனே பொய்கூறினுய் உல கிற் பூஜையில்லாமல் வருந்துக வென்று சபிக்க, அடியேன் கூறும் பொய்யைத் திருவுள்ளத்தில் வைக்காமல் காப்பாற்ற வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய மயூரகிரியை யடை ந்து நமது குமாரனைப்பூஜித்தா லுன்சாபநீங்கு மென்று சிவ பெருமானருளிச் செய்ய வவ்விதமே யான் மயூரகிரியை யடைந்து சரவணப்பொய்கையில் முழுகி கிரியைப்பிரதக்ஷி ணஞ்செய்து ஷடாக்ஷரத்தையு முச்சரித்து விபூதி ருத்திரா க்ஷமணிந்து, மலையின்மேற் போய்க் குமாரசுவாமியைப் பூஜித்து நமஸ்கரித்து வேண்டுதல் செய்கின்ற காலத்தில் குமாரசுவாமியும் நமது பிதா அருளிச்செய்தபடி உலகிலுன க்குப்பூஜை நடவாதாயினும் நித்திய நைமித்திய காம்ய கரு மங்களிலும்பிராமணருடைய வடிவத்திலுமுன்னைத்தள்ளாது பூஜை செய்கவென்றருளிச்செய்தார். உடனே யான் விடை பெற்றுக்கொண்டு எனதுலகத்தை யடைந்தேன்.

இனிமேல் கருடன்செய்த பூஜையைச் சொல்லுவோ மென்று சொல்லுகிறார். கருடனுடைய மாதாவான விநதை யென்பவள், தன் சகோதரியான கத்துரு வென்பவளோடு ஒரு சோலையிற் புகுந்தாள். அப்பொழுது கத்துரு வென்ப வள் விநதையைப்பார்த்து இந்திரன் குதிரையின் நிறத்தை நீ சொல்வாயானால் நானுனக்கடிமை. நான்சொன்னால் நீயென க்கடிமையென்று சொன்னாள். அப்பொழுது விநதையானவ ளிந்திரன் குதிரைவெண்மை நிறமுடையதென்று சொன்னா ள். கத்ரு என்பவள் நீல நிறமுடையதென்றாள். அதை க்கேட்ட விநதை நாளைக்குப்பார்ப்போ மென்று கூற விருவ

ரும் திரும்பி வீட்டிற்கு வந்தார்கள். கத்துரு யென்பவள் தன் புதல்வர்களாகிற நாகர்களை யழைத்து நீங்களிந்திரனது குதிரையைக் கருமையாகச்செய்து திரும்புங்களென்றாள். நாகாணவரு மவ்விதமே செய்தார்கள். விநதையானவள் கத்துருயென்பவளோடு விண்ணுலகிற்போய்க் குதிரையைப்பார்க்க நீல நிறமுடையதாயிருந்தது. உடனே வினதையானவளுனக்கடிமை யென்று சொல்ல, விருவரு பூமியில் வந்தார்கள். விநதை யென்பவள் வைகறைக் காலத்தில் கத்துருவினிடம் போய், அவள் சொல்லுமேவல்களைச் செய்து மாலைக் காலத்தில் வீட்டிற்கு வருவாள். நெடுங்காலமிப்படியிருக்க வொருநாள் கருடன் தாயினிடத்தில் மாதாவே பிரதிதினம் யெங்கே போய்வருகிறாய் சொல்லவேணுமென்றான். விநதை யுள்ளபடி சொல்ல விதற்கு உபாயம் சொல்லுகிறேனென்று கருடன் சொல்லுகிறான். நீ கத்துருவின் புதல்வர்களிடம் நீங்களெதை விரும்பினாலுந் தருவேன். யென்னுசிறையை விடுங்களென்று சொன்னால் அவர்களதற்கு உடன்பட்டவர்களாய்த் தங்களுக்கிஷ்டமானதைச் சொல்லுவார்கள். யென்னிடம் வந்து தெரிவித்தால் அமுதமாயிருந்தாலுங்கொண்டு வருவேனென்றுகூறினான். விநதையுமவ்வாறு சொல்லுதலும் நாகர்கள் அமுதத்தைத் தந்தால் சிறையை நீக்குவோமென்று சொல்ல, விநதையும் புதல்வனிடஞ் சொல்ல மயூரகிரியிற் வீற்றிருக்கும் குமாரசுவாமியைப்பூஜித்து வேண்டியதைப்பெற்று, அமுதத்தைத் தருவேனென்று நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டு மயூரகிரியை யடைந்து சரவணப்பொய்கையில் முழுகி மலையை நூற்றெட்டுத் தரம் பிரதக்ஷிணஞ்செய்து குமாரசுவாமியைப்பூஜித்துக் கிருபையைப் பெற்று யவ்விடத்தை விட்டு நீங்கி விண்ணுலகை யடைந்து அமுதை யெடுத்துத்திரும்பி

வந்து நாகர்களுக்குக்கொடுத்து மாதாவின் சிறையை நீக்கித் தானுஞ் சுகமடைந்தான்.

பிர்ம்மாவின் கதையும் கருடேசன் கதையுமுரைத்தசருக்கம் முற்றிற்று.

பதினொன்றாவது

இந்திரன் கதையும், ஆதித்தன் கதையும், மன்மதன்கதையுமுரைத்த சருக்கம்,

நாரதமுனிவனே கருடன் கதையைச் சொன்னோமினி யிந்திரன் கதையைச் சொல்வோம். முற்காலத்தி லிந்திரன் மூசியென்னு மசுரனோடு உயுத்தஞ் செய்து ஜயிக்கமுடியாத படி வியாழபகவானிடம் போய் நடந்ததைச் சொன்னான். அவரும் மயூரகிரியிலிருக்கும் குகனை வேண்டிக்கொண்டால் கிருபை புரிவாரென்று சொல்லத் தேவேந்திரனும் மயூரகிரியை யடைந்து சரவணப்பொய்கையில் ஸ்நானஞ் செய்து விபூதி ருத்திராக்ஷமணிந்து ஷடாக்ஷரத்தை யுச்சரித்து கிரியைப்பிரதக்ஷிணஞ்செய்து குமார சுவாமியை விதிப்படி பூஜித்து நமஸ்கரித்துத்தோத்திரஞ் செய்தான். குகப்பெருமானுமசரீரிவாக்காலினிமேலசுரனோடு நீ யெதிர்த்தால் அவன் வெட்கியோடுவானென்றருளிச் செய்தார். இந்திரனும் மனங்களித்து விடைபெற்றுக்கொண்டு சுவர்க்கத்தை யடைந்து மூசியென்றவசுரனை ஜயித்து முன்போல விண்ணுலகை யரசாண்டு சுகமாயிருந்தான்.

இனிமேல் சூரியனது பூஜையைச் சொல்லுவோம். சூரியன் உஷாதேவியைக் கலியாணஞ் செய்தான். உஷாதேவியும் தன்னயகனுடைய வுஷ்ணத்தைச் சகிக்காதவளாய்த்தனது நிழலைப் பெண்ணாகவங்கே நிறுத்தித்தான்குருகண்டத்தைமடைந்து பெண்குதிரை வடிவமாகித்தவஞ் செய்து

கொண்டிருந்தாள். சூரியன் நிழலையே மனைவியென்றுகரு தியிருந்தான். சாயா தேவியும் கருப்பங்கொண்டு மனமகி ழ்ச்சி பெற்றுப்புத்திரர்களைப் பெற்றாள். அவ்விதம் பெற்ற வள் நடுவுநிலை யில்லாதவளாய்ப் புதல்வர்களி னன்புமிக்கத் தன்னைத் தஞ்சமாக முன் கருதியிருந்த புதல்வர்களைவெறுத் திருந்தாள். சூரியன் அச்சாயைசெய்யும் வஞ்சகத்தையறிந்து யெல்லாப்பிள்ளைகளையுஞ் சமமாகப் பாவிக்காமல் பெற்றவள் சிலபுதல்வர்களை வெறுப்பது யென்னவென்று வவளிடத்திற் சொல்லிக் கோபிக்கவவள் சூரியனுக்குமுன் நடந்த யெல்லா வற்றையுஞ் சொன்னாள். உடனே சூரியன்றன் மனைவி யைத்தேடிக் காணமல் மயங்குஞ்சமயத்தில் யாஞ்சென்று சூரியனே மயூரகிரியிலிருக்குங் குகப்பெருமானைப்பூஜித்தால் உன்னிஷ்டட்டம் நிறைவேறுமென்று சொன்னேன். அதைக் கேட்டுச்சூரியன் மயூரகிரியை யடைந்து சரவணப் பொய்கை யில் முழுகி கிரியைப் பிரதக்ஷிணஞ்செய்து மலைமேலேபோய் க்குமாரசுவாமியை விதிப்படி பூஜித்து நமஸ்கரித்துத் துதித் தான். குகப்பெருமானும் அசரீரி வாக்கால் உன்மனைவி உனது உஷ்ணத்தைச் சகிக்காதவளாய்ப்பெண் குதிரையாக க்குருகண்டத்திலிருக்கிறாள். நீ போயழைத்தால் வருவாள் நீ யினிமேலவளுடைய பக்கத்திலிருந்தாலுனது உஷ்ணத் தையடக்கிக் கொள்ளென்றருளிச் செய்தார். சூரியனும் விடைபெற்றுப்போய்க் குருகண்டத்தை யடைந்து பெண் குதிரைவடிவமான தன் மனைவியை யழைத்தான். அவளும் குதிரை வடிவத்தை நீக்கித் தனக்குரிய பெண்வடிவத்தை க்கொண்டுவரச் சூரியன் அவளுடனே தன்னுலகை யடை ந்தான்.

இனிமேல் மன்மதன் சரித்திரத்தைக் கூறுவோம். மன்மதன் உலகனைத்தையும் வெற்றிக்கொள்ளும் பொரு

ட்டு மயூரகிரியை யடைந்து சரவணப்பொய்கையில் முழுகி கிரியைப் பிரதக்ஷிணஞ் செய்து மலைமேற்போய் விதிப்படி குமாரசுவாமியைப்பூஜித்து நமஸ்கரித்துத் தான்வந்தகாரண த்தை விண்ணப்பஞ்செய்தான். குமாரசுவாமியசரீரி வாக்கால் மன்மதனே நீ மூவுலகத்திலும் வெற்றியை யடைவா யென்றருளிச் செய்தார். அதைக்கேட்டு மன்மதன் மன மகிழ்ந்து விடைபெற்றுக்கொண்டு மூவுலகத்தையுமடைந்து யெல்லோரையும் வசப்படுத்தினான்.

இந்திரன் ஆதித்தன் மன்மதன் முதலியவர்கள் கதையுறைத்த சருக்கம் முற்றிற்று.

பன்னிரண்டாவது
பாண்டவச் சருக்கம்.

நாரதமுனிவனே யினிமேல் பாண்டவர்பூஜித்ததன்மை யைச்சொல்வோம். துரியோதனனுதியால் வனத்தையடைந்த பாண்டவர்களிடம் கிருஷ்ணபகவான் போய்ச்சேரப்பாண்டவர்கள் நல்வரவென்று கூறித்தங்கள்குறையைத்தெரிவிக்க அதைக்கேட்டுக்கிருஷ்ணபகவானும் மயூரகிரியில்வீற்றிருக்கும் குமாரசுவாமியைப் பூஜித்தால் சகலமும் கைகூடுமென்று கூற அவ்விதமே பாண்டவர்கள் மயூரகிரியையடைந்து சரவணப் பொய்கையில் முழுகித் கிரியை வலம் வந்து மலையின்மேற்போய் குமாரசுவாமியை விதிப்படி பூஜித்து நமஸ்கரித்துத்துதித்துக் குமாரசுவாமிக்கு மேற்குப்பக்கத்தில் தங்கள் பெயரால் தீர்த்தமொன்று உண்டாக்கித்தவத்தைச் செய்தார்கள். குமாரசுவாமி யவர்களுக் கெதிரில்வந்து நீங்கள் நினைத்தபடி கைகூடுமென்றருளிச் செய்தார். பாண்டவரு மவ்விடத்தைவிட்டு நீங்கி முன்னிருந்த வனத்தை ய்டைந்து கிருஷ்ணபகவானிடம் சொன்னார்கள். பிற்பாடு கூறியதினங்களைக் கழித்துக் கிருஷ்ணபகவானைத் தூதாகவனுப்பி நாட்

டைக்கேட்டுத் துரியோதனன் மறுத்த பின்னர் உயுத்தஞ் செய்து குமாரசுவாமியின் வரத்தால் சகலரையுஞ்சங்கரித்து த்தருமன் கிருஷ்ணபகவானுதவியால் முடிசூட்டப்பெற்றுத் தான்பெற்ற பூமியைப் பாதுகாத்து வந்தான், இந்த மகிமை களைக்கேட்டவர்கள் மோக்ஷத்தையடைவார்கள். சத்தியம் சத்தியமென்று பிர்ம்மா நாரதமுனிவனுக்குச் சொல்லி யருளினு ரென்று சூதமுனிவன் நைமிசாரண்ணியவாசிகளான ரிஷிகளுக்குக் கூறினுன்.

பாண்டவச் சருக்கம் முற்றிற்று.

பதிமூன்றுவது
அருச்சனைச் சருக்கம்.

மயூரகிரியின் பெருமையை யறிந்த நைமிசாரண்ணிய வாசிகளான ரிஷிகள் யெத்தலங்களிலும் மயூரமாநகரம் மேன்மைபொருந்திய தென்று பிர்ம்மா சொல்லக்கேட்ட நாரதமுனிவன் பின் செய்தகாரியத்தை யருளிச்செய்யவே ணுமென்று விண்ணப்பஞ் செய்யச் சூதமுனிவன்கூறுவான் நாரதமுனிவன் பிர்ம்மாவினுடைய திருவடிகளைநமஸ்கரித்து மயூரகிரியை யடைந்து அடியேன் குமாரசுவாமியைப் பூஜித்துக் கிருபையைப் பெறவேண்டுமென்று கூறினுன். பிர்ம் மாவு மப்படியே பூஜிப்பாயாகவென்றருளிச்செய்ய நாரதமு னிவன் விடைபெற்றுக்கொண்டு மயூரகிரியை யடைந்து சரவணப்பொய்கையில் ஸ்நானஞ்செய்து மலையைப் பிரதக்ஷி ணஞ்செய்து மலையின்மேற்போய் வீரபாகு தேவரையும் பரி வாரங்களையும் பூஜித்து தரிசனஞ்செய்து, உட்புகுந்து சன் னிதியிற்போய் பஞ்சாமிருத முதலிய வற்றினுலபிடேகஞ் செய்து வத்திரமாபரணம் சந்தணம் புட்பமாலைகள் முதலிய வைகளையும் சாத்தி அங்கபூஜையையு நிவேதனத்தையுஞ்

செய்து தூபதீபங்காட்டிப் புட்பங்களாலிருசக்திகளோடு குமாரசுவாமியையருச்சனைசெய்து தோத்திரஞ்செய்துகுகப் பெருமானே நானின்பக்கடலைப் பொருந்தும்படி கிருபை புரியவேண்டு மென்று முனிவன் விண்ணப்பம் செய்யக் குமாரசுவாமியும் முனிவனே யெவற்றினும் பற்றற்று நம்மி டத்திலன்புவைத்து நீ யென்றைக்கும் வாழ்கவென்று அரு ளிச் செய்தார். நாரதமுனிவனுமவருடைய கிருபையைத் துதித்து மயூரகிரியிலிருந்தான். முனிவர்களே மயூரகிரியின் மேன்மையையும் குமாரசுவாமியின் திருவிளையாடலையும் நீங் கள்கேட்டதினல் மிக்கதவத்தையுடையவர்களாய் நெடுங்கா லம்வாழ்க. இந்தப் புராணத்தைக் கேட்டவர்களெவராயினும் செல்வம், தீர்க்காயுள், கல்வி, ஞானம் முதலியவற்றை யடைந்து யிம்மையில் நன்ருக வாழ்ந்து மறுமையிற் குமார சுவாமியினது, திருவடித்தாமரையின் கீழிரண்டறக்கலந்து நித்தியானந்தாயிருப்பார்களென்று சூதமுனிவன்கூற முனி வர்கள்கேட்டு மயூரகிரியிலெழுந்தருளியிருக்கும் குமாரசுவா மியைத் தோத்திரஞ்செய்து மனத்திற் றியானித்து நைமிசா ரண்ணியத்தில் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

அருச்சனைச் சருக்க முற்றிற்று.

மயூரகிரித்தலபுராண சங்கிரகவசனம் முற்றிற்று,

இடும்பன் சரித்திரம்.

கலிங்கதேசத்தி லுண்டான இடும்பனென்னு மொரு வசுரன் வயிற்றுவலியினுன்மிக வருந்தி யெவராலும் தீராம லிந்த மயூரகிரித்தலத்தின் மகிமையை விசாரித்துக் கிரவுஞ்ச கிரியைக் காவடியாகக்கொண்டுவந்து பிரார்த்தனையை நிறை வேற்றி, வயிற்றுவலி நீங்கி யிவ்விடத்திலேயே பத்தகோடிக ளிலொருவராய் நின்று பிரகாசித்துக் கொண்டிருக்கிருர்.

அனேகர் மச்சக்காவடி, அக்கினிக்காவடி, இன்னுமனேகம் விசித்திரமான சோதனைக்காவடிகளும் அனேக தான்ய சாமான்களும் கொண்டுவந்து, அவர் சன்னிதியில் பிரார்த்தனை நிறைவேற்றுகிறார்கள். அனேகஞ் சிதறுதேங்காய்களுடைபட்டு வருகின்றன. பத்தர்களுத்தேசித்த காரியங்கள் தடையின்றி நிறைவேற்றிவருதல் யாவருக்குந் தெரிந்த விஷயமே.

முற்றுப் பெற்றது.

ஸ்ரீமயூரகிரியாண்டவன் றிருவடிகளே சரணம்.

உ
சிவமயம்
ஸ்ரீஷண்முகநாதன் துணை.

S
[49928
626:38.2197 Mb

குன்றக்குடித் திருப்புகழ்.

(1) பிறர் புகழின்சொற்பயிலுமிளந்தைப்
பருவமதன்கைச் சிலையாலே
பிறவிதருஞ்சிக் கதுபெருகும்பொய்ப்
பெருவழிசென்றக் குணமேவி
சிறுமைபொருந்திப்பெருமைமுடங்கிச்
செயலுமழிந்தற் பமதான
தெரிவையர்தங்கட்கயலைவிரும்பிச்
சிலசிலபங்கப் படலாமோ
கெறுவிதவஞ்சக் கபடமொடெண்டிக்
கிலுமெதிர்சண்டைக் கெழுசூரன்
கிளையுடன்மங்கத் தலைமுடிசிந்தக்
கிழிபடதுன்றிப் பொருதோனே
குறுமுனியின்பப் பொருள்பெறஅன்றுற்
பனமனுவுஞ்சொற் குருநாதா
குலகிரிதுங்கக்கிரியுயர்குன்றக்
குடிவளர்கந்தப் பெருமாளே. (1)

(2) அழகெரிந்தசந்த்ரமுகவடங்கலந்த
அமுதபுஞ்சஇன்சொல் மொழியாலே
அடிதுவண்டதண்டை கலிலெனும்சிலம்பொ
டணிசதங்கைகொஞ்சு நடையாலே
சுழியெறிந்தநெஞ்சு சுழலநஞ்சணிந்து
தொடுமிரண்டுகண்கள் அதனாலே

துணைநெருங்குகொங்கைமருவுகின்றபெண்கள்
துயரையென்றொழிந்து விடுவேனோ
எழுதுகும்பகன்பினிளைய தம்பிநம்பி
யெதிரடைந்திறைஞ்சல் புரிபோதே
இதமகிழ்ந்திலங்கையசுரரந்தரங்க
மொழியவென்றகொண்டல் மருகோனே
மழுவுகந்தசெங்கை அரனுகந்திறைஞ்ச
மனுவியம்பிநின்ற குருநாதா
வளமிகுந்தகுன்றை நகர்புரந்துதுங்க
மலைவிளங்கவந்த பெருமாளே.(2)

(3) கடினதடகும்பநேரென வளருமிருகொங்கைமேல்விழு
கலவிதருகின்றமாதரொ டுறவாடிக்
கனவளகபந்தியாகிய நிகழ்தனிலிருந்துதேனுமிழ்
கனியிதழைமென்றுதாடனை செயலாலே
துடியிடைநுடங்கவாள்விழி குழைபொரநிரம்பமூடிய
துகில்நெகிழவண்டுகோகில மயில்காடை
தொனியெழவிழைந்துகூறிய கொடுநகமிசைந்துதோள்மிசை
துயில்வசஇன்பமேவுத லொழிவேனோ
இடிமுரசறைந்துபூசல்செய் அசுரர்கள்முறிந்துதூளெழ
எழுகடல்பயந்துகோவென அதிகோப
எமபடருமென்செய்வோமென நடுநடுநடுங்கவேல்விடு
இரணமுகசண்டமாருத மயிலோனே
வடிவுடையஅம்பிகாபதி கணபதிசிறந்துவாழ்தட
வயலினகர்குன்றமாநக ருறைவோனே
வகைவகைபுகழ்ந்துவாசவன் அரிபிரமர்சந்த்ரசூரியர்
வழிபடுதல்கண்டுவாழ்வருள் பெருமாளே (3)

(4) நாமேவுகுயிலாலு மாமானயிலாலு
நாடோருமதிகாயும் வெய்யிலாலும்
நார்மாதர்வசையாலும்வேயூதுமிசையாலும்
நாடாசைதருமோக வலையூடே
ஏமாறிமுழுநாளும் மாலாகிவிருதாவி
லேவாரும்விழிமாதர் துயரூடே
ஏகாமலழியாத மேலானபதமீதி
லேகியுனுடன்மேவ அருள்தாராய்
தாமோகமுடனாறு பால்தேடியுரலோடு
தானேறிவிளையாடு மொருபோதில்
தாயாகவருசோதை காணுதுகளவாடு
தாமோதரன்முராரி மருகோனே
மாமாதுவனமாது கார்மேவுசிலைமாது
மாலாகிவிளையாடு புயவீரா
வானாடுபுகழ்நாடு தேனாறுபுடைசூழு
மாயூரகிரிமேவு பெருமாளே.(4)

(5) நேசாசாராடம்பரமட்டைகள்
பேசாதேயேசுங்கள்மட்டைகள்
நீசாளோடேயும்பழகிக்கவர் பொருளாலே
நீயேநானேயென்றொருசத்தியம்
வாய்கூசாதோதுங்கபடத்திகள்
நேராலேதா நின்றுபிலூரிகள் எவர்மேலும்
ஆசாபாசதொந்தரையிட்டவர்
மேல்வீழ்வார்பால்சண்டிகள்கட்டழ
காயோமீதோவெங்குமினுக்கிகள் வெகுபோகம்
ஆகாதாவேசந்தருதிப்பொழு
தேகோவாவாவென்றுபகட்டிகள்
ஆகாமோகாவப்பிகள்கிட்டிலு முறவாமோ

பேசாதேபோய்நின் றுறியிற்றயிர்
வாயாவாவாவென் றுகுடித்தருள்
போராலேநீள் கஞ்சன்விருத்தெதிர் வருதூதா
பேழ்வாய்வேதாளம்பகடைப்பகு
வாய்நீமாறுளுஞ்சாணத்தொடு
பேயாவும்போர்வென்றெதிரிட்டவன் மருகோனே
மாசூடாடாடும்பகையைப்பகை
சூராரோடேவன்செருவைச்செரு
மாசூராபாரெங்குடலப்பொலி முருகோனே
வானாடேழ்நாடும்புகழ்பெற்றிடு
தேனாறேசூழ்துங்கமிலப்பதி
மாயூராவாழ்குன்றைதழைத்தருள் பெருமாளே.(5)

(6) ககுபநிலைகுலையவிகல்மிகுபகடின்வலியுடைய
தந்தத்தினைத்தடிவ தொந்தத்திரத்தையுள
அகிலமறைபுகழ்பரமர் ஞெகிழிகலகலகலெனும்
அம்பொற்பதத்தர்தனு வம்பொற்பொருப்படர்ப
களபபரிமளமெழுதமெழிலில் முழுகுவமுளரி
அஞ்சப்புடைத்தெழுவ வஞ்சக்கருத்துமதனபிஷேகம்
கடிவபடுகொலையிடுவகொடிய முகபடமணிவ
வின்பச்சுடர்க்கனக கும்பத்தாச்செருவ
பிரீதில்புளகிதசுகமு மிருதுளமும்வளரிளைஞர்
புந்திக்கிடர்த்தருவ பந்தித்தகச்சடர்வ
கயல்மகரநிகாமிகவியன்மருவுநரியின்முநிர்
சங்கிப்பிமுத்தணிவபொங்கிக்கனத்தொளிர்வமுலைமாதர்
வகுளமலர்குவளையிதழ் தருமணமுமிருகமத
மொன்றிக்கருத்துமுகில் வென்றிட்டுநெய்த்தகுழ
லசையருசியமுர்தக்ருத வசியமொழிமயில்குயிலெ
னும்புட்கூர்பகர வம்பற்றமர்புரிய

வ்ருமறலியறணமொடு முடுகுசமர்விழியிணைகள்
கன்றிச்சிவக்கமகிழ் நன்றிச்சமத்துநக நுதிரேகை
வகைவகைமெயுறவளைகள்கழலவிடை துவளவித
மூண்டுட்ப்ரமிக்கநசை கொண்டுற்றணைத்தவதி
செறிகலவிவலையிலெனதறிவுடையகலைபடுத
லுந்திப்பிறப்பற நினைந்திட்டமுற்றுனடி
வயலிநகர்முருகசெரு முயல்பனிருகரகுமர
துன்றுட்டசிட்டகுண குன்றக்குடிக்கதிப அருளாதோ.

தகுகுதகுதகுதகுகு திகுகுதிகு திகுதிகுகு
தங்குத்தகுத்தககு திங்குத்திகுத்திகுகு
சகணசகசகசகணசெகணசெகசெகசெகண
சங்கச்சகச்சகண செங்கச்செகச்செகண
தனனதனதனதனன தெனனதெனதெனதெனன
தந்தத்தனத்தனன தெந்தத்தெனத்தெனன-தனனா
தகுததகுதகுத்குதி திகுதிதிகுதிகுதிகுதி
தங்குத்தகுத்தகுகு திங்குத்திகுத்திகுகு
டணணடணடணடணண டிணிணிடிணிடிணிடிணிணி
டண்டட்டடட்டடண டிண்டிட்டி டிட்டிடிணி
தாரதாதாதார திரிரிதிரிதிரிதிரிரி
தன்றத்தாத்தார தின்றித்திரித்திரிரி யெனதாளம்
தொகுதிவெகுமுரசுகரடிகைடமருமழுவுதவில்
தம்பட்டமத்தளமினப்பட்டடக்கைபறை
பதலைபலதிமிலைமுத லதிரவுதிர்பெரியதலை
மண்டைத்திருட்பருகு சண்டைத்திரட்கழுகு
துடர்நிபிடகருடனடர் தாகாடமொகுமொகென
வந்துற்றிடக்குடர்நினைந்துற்றிசைத்ததிர முதுபேய்கள்

கனககரிநெறுநெறெனவினிதினிதுதினவினைசெய்
வெங்குக்குடத்தகொடி துங்குக்குகுக்குகென
வடனமிடுதிசைபாவி நடனமிடவடவிரவி
திங்கட்ப்ரபைக்கதிர்கள் மங்கப்ரசித்தகுல
தாரகஜாதகடக முரணாரணநிருதர்விரல்
மிண்டைக்குலைத்தமர்செய் தண்டர்க்குரத்தையருள்
பெருமாளே.

குன்றக்குடித் திருப்புகழ் முற்றுப்பெற்றது.

"சுபமஸ்து"

உ

சிவமயம்.

ஸ்ரீஷண்முகநாதன் துணை.

ஸ்ரீ மயூரகிரியாண்டவன்பேரில்

கநநயதேசிகஜிகிபிகி உரிகிடால் இரட்டைப்பல்லவி-
சக்ரதானம் சங்கீதஸாஹித்ய மஹாவித்வான் குன்றக்குடி
பிர்ம்மஸ்ரீ சி. கிருஷ்ணய்யரவர்களியற்றிய

கீர்த்தனங்கள்.

இராகம்-உசேனி. தாளம்-சதுரஸ்ரஜாதி திரிபுடை.

பல்லவி.

(1) விநராமா மயூராசலேச (வி)

அனுபல்லவி.

கநராவல்லிதேவ ஸேநேச (வி)

சரணம்.

தரலோ சங்கீதசாஸ்த்ர ஸ்வரக்ராம ச்ருதிக்ஷேத்ர
சிரக்ருஷ்ணகவிஸ்தோத்ர சுமுகதயாபூர்ணநேத்ர

இராகம்-காபி. சாபுதாளம்-தரங்கம்.

பல்லவி.

(2) குஹநாமமுபல்கவே ஓமாநஸ (குஹ)

அனுபல்லவி.

குஹநாமமுஜீவு நகுதாரகமுலு
மஹிலோசரவணோத்பவஷடாநந (குஹ)

சரணங்கள்.

1. தேவதேவாதிதேவுடு வல்லிஸமேத
தேவநாயகிநாதுடு ஷடாநந (குஹ)

2. சக்திக்குகுடத்வஜுடு பலநிகிரி
புக்திமுக்திப்ரதுடு ஷடாநந (குஹ)

3. பரமாத்வைதபரஹ்மமு ப்ரஹ்மாதுலகு
ப்ரணவார்த்தமோஸகிந ஷடாநந (குஹ)

4. பாதுஷணசேயகா வ்ருதாநா
ஸ்துதிசேயுடபொந்தகா ஷடாநந (குஹ)

5. மஹதாநந்தகாமு பக்துலகெல்ல
மஹதத்புதவாமு ஷடாநந (குஹ)

6. அஹங்காராதிக்ரோதமு லோபமுல்யாக
இஹபந்தமுதீர்ச்சுநு ஷடாநந (குஹ)

7. பவரோகசமநமு பக்துடுக்ருஷ்ண
கவிஸ்தோத்ரசரணமு ஷடாநந (குஹ)

ஸ்ரீ மயூரகிரியாண்டவன்பேரில்

ஷியார்சகோதரர் குன்றக்குடி சங்கீதஸாஹித்ய
மஹாவித்வான் பிர்ம்மஸ்ரீ சி. இராமபாக்வதரவர்களியற்றிய
கீ ர் த் த ன ங் க ள்.

தோகையடி விநாயகர் துதி.

இராகம்-கௌளை, தாளம்-சதுரஸ்ரஜாதி திரிபுடை

பல்லவி

(1) துங்கமாகணேசனே தோகையடிவாசனே. (து)

அனுபல்லவி

தங்கும்புகழ்குன்றைச் சரவணபவன்றுதி (து)

சரணம்

ஸகலபுவனங்களும் ஸகலமுனிவர்களும்
ஸகலதேவதைகளும் சார்ந்துணேயேபோற்றும்
விகஸிதகஜமுகா விமலசுகதாயகா
மிகவும்பணிவுடனே ராமகவி துதிக்கும் (து)

ஸ்ரீமயூரகிரியாண்டவன் கீர்த்தனங்கள்.

இராகம்-சுத்தஸாவேரி, தாளம்-ஆதி.

பல்லவி

(2) ஸேநாபதே வல்லிகுஞ்சரீபதே (ஸே)

அனுபல்லவி

காநாம்ருதவாரி தோன்றுங் குன்றைநகர்
காங்கேயனே கருணையிங்கருள்புரிவாய் (ஸே)

சரணம்

தத்துவபோத சதுர்மறையோர் துதி
சாற்றிடுஞ்சாச்வத ஸ்ரீஷண்முகா
எத்தலத்தோறுமிறைஞ்சிடு மீசனருள்பாலா
ஸ்ரீராமகாநலோலா தேவா (ஸே)

இராகம்—காபி, தாளம்—திஸ்ரம்.

பல்லவி

(3) மயூரவாஹநா மங்கையிருவர்
மகிழுமோஹநா (ம)

அநுபல்லவி

தயாபரஸமாநரஹித சரவணபவசுகுமாா
தருணமிதருள்புரிவாய் (ம)

சரணங்கள்

1. செந்திலம்பதி திருப்பரங்குன்றம்
செம்பழமுதிர் சோலைபழநி
வந்துலவுந் திருவேரகம்வளர்ந்
தோங்குங்குன்று தோருடல்புரி (ம)

2. நான்மறைப் பொருளாறுமுகமு
நான்மூன்றுகரமும் வேலுமிலங்கும்
மேன்மைதருங் குன்றைராமகவி
துதிக்கும்வெற்றி மாலைபுனை. (ம)

இராகம்—உசேனி, தாளம்—ஆதி.

பல்லவி

(4) கந்தாகடம்பாகுகா கருணை
யெந்தாய் வல்லிகுஞ்சரீமகிழும்பாகா (க)

அனுபல்லவி

செந்தாமரைப்பாதந்தந்தருளும்வேலா
சேவற்கொடியுடையாய் மயூராசலக் (க)

சரணங்கள்

1. மோனமுனிவர்கள் முத்தமிழாளர்கள்
ஞானம்பெறவருள் நாதாகுன்றக்குடிக் (க)

2. ஆறுதலையுடையாயஞ்சுதலைப்போக்கும்
வேறுதெய்வமுண்டோ வெற்றிமயிலேறுங் (க)

3. சோமவதனசுமுகதுதிசெய்யும்
ராமகானலோல ராஜகோலாகலா (க)

இராகம்—தோடி, தாளம்—மிஸ்ரம்.

பல்லவி

(5) கோலமஞ்ஞையேறிவந்தருளும் குமரனே
குருபரனேநாளும் (கோ)

அனுபல்லவி

ஆலமுண்டவர்க்குபதேசம் அருளுஞ்சிவகுருநாதா
அமரர்கள் சிறைதவிர்நீதா (கோ)

சரணம்

அண்டசராசரமனைத்து மன்புடன்றினமாதரிக்குங்
கொண்டல்வண்ணன்மருகனே கோலவள்ளியானைமருவுந்
தெண்டிரைக்கடல்சுவறவிடுத்தவேல்திருக்கரமேந்தியதீரா
கண்டுதொழுதிடுங்குன்றைராமகவிக்
கருளுஞ்சரவணபவனே
அணிமலரயன்பணிபவனே (கோ)

இராகம்—பூரிகல்யாணீ, தாளம்—திஸ்ரம்.

பல்லவி

(6) நம்பினவர்க்கருள்செய்யும்வேலவா
நாநாவிதமானபொருளாதாரமுநீயென்றே (ந)

அனுபல்லவி

செம்பொன்மணியுறை குன்றைநகர்வளர்
சேவற்கொடியானென்றுஞ் செந்தமிழாற்றுதித்து (ந)

சரணங்கள்

1. அந்தரங்கமாக யீசர்க்குபதேசம்
அருளியவாறு முகத்தினுல்விளங்கும்
இந்திரலோகமெல்லாமிசைபாவும்
இன்னிசையாழுடன்பாடி
மன்னுநின்பொன்னடிதேடி (ந)

2. புத்ரமித்ரகளத்ராதிய செல்வம்
போக்குவரத்துக்களெல்லாமுன்செயலே
சத்தியமெஞ்ஞானந்தந்தருள்செய்குவாய்
சாற்றும்புகழ்ராமகவி
மாலைபுனைமுருகாவுனை (ந)

இராகம்—முகாரி, தாளம்—ஆதி.

பல்லவி

(7) முருகசரவண பவாசரணம்
மூவுலகும்தொழும் பாதாசரணம் (மு)

அனுபல்லவி

அருமறைபுகழ்குன்றை யாறுமுகவேலோனே
ஆதரித்தாளுதர்க்கிதுசமயம் (மு)

சரணங்கள்

1. சத்ருசம்ஹாரவேலா சரணஞ்சரணம்
சாதுஜனரக்ஷகா சரணஞ்சரணம்
மித்ரபேதஞ் செய்யும் வீணர்களைமுனிந்து
மீளாதநரகத்தில் வீழ்த்திடுந்தீரா (மு)

2. உனதுதிருப்புகழோது மடியார்
உற்றவருத்தத்தை யூதிடுஞ் சீலா.
மனதுகந்து நிதம் வாழ்த்திடும்ராமகவி
மகிழ்ந்தோங்கியெந்நாளும் வாழவருள்புரிவாய் (மு)

இராகம்—நாதநாமக்ரியை தாளம்—ஆதி

பல்லவி

(8) வன்னமயிலின்முருகா
வந்தாள் மால் மருகா. (வ)

அனுபல்லவி

தன்னந்தனிப்பொருளிதென்றுந்
தாதையார்க்கருளிய. (வ்)

சரணம்

நன்றருளவேண்டுமென்று நாளுந்துதிசெய்யும்
குன்றைராமகவிமாலே குதூகலமாயணியும் (வ)

இராகம்—காம்போதி, தாளம்—சாபு.

பல்லவி

(9) முருகசரவணபவ ஷண்முகனே (ஷண்முகனே)
அருள்வடிவேலேந்திய (முரு)

அனுபல்லவி

திருவுரையும்விசல்யபுரம் வளர்வேதியர்
தரிசனஞ்செய்யும் வல்லிகுஞ்சரீமருவும் (மு)

சரணங்கள்

1. ஆயிரத்தெட்டண்டமெல்லாமொருகுடைக்கு
ளாண்டசூராதியரை ஜயங்கொண்ட
மாயிருஞாலமெல்லாமொருநொடிக்குள்
மயில்மீதிலேறிவலம்வருந்தீரா (மு)

2. வேதனைச்சிறையிட்டு வேதப்பொருளுரைத்த
விமலநின்மகிமையையாரறிவார்
ஆதிமத்யாந்தரஹிதபரமர்க்கு
அன்புடன்ப்ரணவோபதேசமருளிய (மு)

3. தேவர்கள்பூமாரிபொழிந்துகுதூஹலிக்கத்
தினமும்ராமகவி மாலையலங்கரிக்க
யாவராயினும் ஸ்கந்ததாசர்க்கருள்பாலிக்க
அற்புதகனகமயிற்சிலம்பொலிக்க (மு)

இராகம்—காஹரப்ரியா, தாளம்—திஸ்ரம்.

பல்லவி

(10) செந்திலாதிபா சேவைதந்தருளும்வேலவா (செ)

அனுபல்லவி

அந்திபகலோர்கடிகையோர்நிமிடமென்னுள்மருவும் (செ)

சரணங்கள்

1. சூரர்கொட்டமடக்கிதேவ
குஞ்சரியைமணந்ததீரா

வாரைப்பொருதுங்கொங்கைவள்ளி
மருவுங்குமாசரவணபவா (செ)

2. சீர்பரவுந்திருச்சீரலே
வாயில்நிற்கும் முருகா
பார்புகழுங்குன்றைராம
கவியென்நாளும் பணிந்துபோற்றும் (செ)

வள்ளிநாயகியைப் பார்த்து ஸ்ரீசுப்ரமணியர் சொல்லும்பதம்.

இராகம்—கமாஸ், தாளம்—ஆதி.

பல்லவி

ஜாலமெல்லாமிங்குசெல்லாதடி—யிந்த
ஜகத்திலென்போற்புருஷனேடி—வள்ளி (ஜா)

அனுபல்லவி

ஞாலத்தைநிமிஷத்தில்வலம்வருவேனடி
நானேயுன்னை மணஞ்செய்வேனடி—வள்ளி (ஜா)

சரணங்கள்

1. தேவரைச்சிறைமீட்டிச்சூரரைவென்றேனடி
தேவசேனையைநான் மணந்துகொண்டேனடி
யாவராயினுமென்னை வணங்காதவராடி
யற்புதமாய்வந்து சுற்றிக்கொள்ளடி—வள்ளி (ஜா)

2. பிர்ம்மவிஷ்ணுசிவனுமென்னைத்துதிப்பாரடி
ப்ரமைகொண்டுமன்மதன் தொழிலைவிட்டானடி
துர்மதியால்நீ தூரவிலகாதடி
தோற்றியுந்தோற்றுமலருள்செய்வேனடி (ஜா)

3. ஆனைமுகவனுக்கு அருந்துணைவனடி
அண்டங்களையெல்லாமாதரிப்பேனடி
சேனைத்தலைவனடி சிகிகிரிவாசனடி
கானப்ரியன் ஸ்ரீராமகவிபுனைவேனடி (ஜா)

இராகம்—பந்துவாளி, தாளம்—ஆதி

(12) கண்ணிகள்.

1. ஓகையருளொண்பொருளுணர்த்துவதுமொன்றே
தோகையடிநாயகன்றுணேயடிகள்நன்றே
2. பண்டுமறையோதுபொருள்நன்றுநமக்காமே
பாலகுமரேசனடி பண்புடையதாமே
3. சிந்தைகளிகொண்டுநிதமெந்தைதுதிபாடு
சீர்தருமெந்நாளும்பரமேசனடிதேடு
4. அண்டசராசரம்யாவுமீண்டளிக்குந்தாயாம்
அம்பிகைபதாம்புஜத்தைச் சிந்தனைசெய்வாயாம்
5. நாரணன்முகுந்தனரி கேசவன்முராரி
ஸ்ரீதரன்பதாம்புஜத்தைச் சிந்தையில்விசாரி
6. நாமகள் பூமகள் நவகோடிசத்திகளும்
நம்பினேரையெந்நாளுந்துன்பகலச்செய்யும்
7. அமிதபராக்கிரம ஆஞ்சநேயனைநினை
அன்பொடுராமன்புகழையேத்துபவனை

இராகம்—தோடி, தாளம்—ஆதி.

பல்லவி

நீமோமுஜூடல்யாக வுண்டே ஸஹிந்துநா (நீ)

அனுபல்லவி

நிரதிசயானந்த நித்யகல்யாண (நீ)

சரணம்

ஸாமகாநதுல்யஸங்கீதாபாண
சாச்வதகம்பீராசரவணேத்பவகுஹ
விமலஸ்ரீஷண்முகாவல்லிகுஞ்சரீநாதா
விஜயமயூரகிரிராமகவிநுத (நீ)

இடும்பன்கீர்த்தனம்.

இராகம்—தர்பார், தாளம்—சாபு.

பல்லவி

(14) இடும்பாசுரதேவனே எங்கருள்புரி (இ)

அனுபல்லவி

கடும்பாரமலையைக் காவடியாய்த் தோளிற்சுமக்குங்
கந்தன்பக்தியிற்சிறந்தவனென்றுகொண்டாடும் (இ)

சரணம்

கலிங்கதேசாதிப காதல்கொண்டுமயூர
கிரியில்காவலாய்நிற்கும் கவசகுண்டலதர
பலவிதநோய்களைத்தீர்க்கும்ப்ரதாப
பணிந்திடும் குன்றைராமகவிக்கருளும்பூப (இ)

ஷியார் தௌஹித்ரரும், ஜகத்குருகானமஞ்சரீ,
சிதம்பரேசபஜனரத்னவளி கிரந்தகர்த்தாவுமான குன்றக்குடி
சங்கீதம் பிர்ம்மஸ்ரீ ரா.ம.வே சுப்பிரமணியசாஸ்திரிகள்
அவர்கள் மயூரகிரியாண்டவன்பேரில்பாடிய
கீர்த்தனங்கள்.

இராகம்—இந்துஸ்தான்கவாய், தாளம்—ஆதி.

பல்லவி

(1) ஸ்ரீஷண்முகபாலயாசுகுஹகுஹ—சிகி
பர்வதாக்ரவர்யமுக்யகேஹ மோஹ (ஸ்ரீ)

அனுபல்லவி

1. த்வந்நாமபஜநபக்தபாலசீல தேவ
பந்நகபூஷண நுதகாலகால ச்ரித
ஜநஸம்ஸாரமோசநலேலபால விஷ்ணு
ப்ரமுகஸகலதேவமூல லீல (ஸ்ரீ)

2. தேவாதிதேவசிவகுமாரவீர நத
தேவராஜதநயாவிஹாரமார சுப
வல்லீமுகாரவிந்தசூரதீர வேத
விதிதஸகலதத்வஸாராகார (ஸ்ரீ)

3. நாரதாதிமுநிநுதிபா,த்ரமித்ர த,த்,த
நாராயணுபிலஷி,தபுத்ரசி,த்ர திவ்ய
நாநாவி,தமோஹ,தசுகா,த்ரமந்,த்ர கீ,த
நா,தப்ரியசுப்ரம்மண்யச்சா,த்ரஸ்தோ,த்ர (ஸ்ரீ)

இராகம்—தேசிகதோடி, தாளம்—சாபு

(2) சரவணஜ குஹ பாலயாசுமாம் (ச)

1. ஸ்ரீவல்லிலோலநிஜபக்தஸம்ரக்ஷணசீல
விதிஹரிபூஜி,தசிகி கிரிலீல கருணுலவால (ச)
2. குமாரதேவதேவபார்வதீநந்,தநசூர
குமார்கச்ரிதமூர்க்கஜந,தாரணதீர ஸர்வலோகா,தார(ச)
3. பாவககர்ப்பஸம்பூ,தமாரசுந்,தரகுஹ
பாரத்பரமஹேச்வரசூரசிகிவாஹதேஜோமயதேஹ (ச)
4. அஜமுகஸாரநு,தகுணகணதிபூ,த
த்விஜராஜவஹரத்னமுகுடஸஹி,தசுப்ரம்மண்யநு,த (ச)

மங்களம்.

இராகம்—பியாக் தாளம்—சாபு.

பல்லவி

ஜயமங்களம் சுபமங்களம் (ஜய)

அனுபல்லவி

1. தோகையடி நாதர்க்கு மங்களம்
தோகைமயிலோனுக்கு மங்களம்
2. ஆறிரண்டு கரங்களுடைய
ஆறுமுகவனுக்கு மங்களம் (ஜய)
3. பாகமமர்வல்லிகுஞ்சரிக்கும்
கேகிகிரிவாசர்க்கும் மங்களம் (ஜய)
4. நன்றருள்சுப்ரம்மண்யபக்தர்க்கும்
குன்றைராமகவிக்கும் மங்களம். (ஜய)

ஸ்ரீ மயூரகிரியாண்டவன் கீர்த்தனங்கள் முற்றுப்பெற்றது.

சுபம்.

வெளிவந்துவிட்டது ! உ வெளிவந்துவிட்டது !!

சிவமயம்

ஸ்வல்பகாபிகளே கைவசமிருப்பதால்

உடனே ஆர்டருக்கு முந்துவது நலம்.

ஸ்ரீசிதம்பரேச பஜன ரத்னாவளீ.

சிவபஜனைக்குப்பொக்கிஷம் போன்றது.

ஆரியர்களே ! ஆஸ்திகசிரோமணிகளே !!

பரமசிவ பக்தசிகாமணிகளே !!!

சுருதிஸ்மிருதி புராணேதிஹாஸங்களில் பக்தி மிகவும் குறைந்து பாபங்களை நிறைந்து தூஷணைகளும் அநாசாரங்களும் பரவி வரும்இக்கலியுகத்தில் மனுஷ்ய ஜன்மாவையடைந்தவர்கள். ஈசுவர நாம பஜனத்தாலேயே ஸத்கதியையடையவேண்டுமென்றும், மற்றைச்சாதனங்களெல்லாம் இதற்கீடாகமாட்டாதென்றும். மற்றயுகங்களிற் செய்யப்பட்ட தியானம், யாகம், அருச்சனை,பூஜை கடோரமான தபஸ் இவைகளாலெந்தப்பலன் உண்டோ. அந்தப்பலன்களையெல்லாம். இக்கலியுகத்தில் ஈசுவர நாமபஜனத்தாலேயே அடையலாம் என்றும் (ஈச்வராத்ஞாநமந்விச்சேத்) ஈசுவரனிடம் இருந்தே ஞானத்தைப் பெறவேண்டுமென்றும் சிவஞானத்தைப் பெறாமல் துக்க நிவர்த்தி ஏற்படமாட்டாதென்ற சுருதிவாக்கியங்களை அநுஸரித்தும், முதியோர்கள் சித்தாந்தஞ் செய்திருக்கிறபடியாலும் (தஸ்மாதன்யத் பரித்யஜ்ய விசிஷ்ய ச கலௌயுகே பக்திரேவ மஹாதேவே கர்த்தவ்யாமுக்தி மிச்சதா) மற்றவைகளைப் பரித்யாகஞ்செய்துவிட்டுக் கலியுகத்தில் மோக்ஷம்பெற இச்சையுள்ளவர்களால் விசேஷித்து மஹாதேவனிடத்திலேயே யன்பைச்செலுத்த வேண்டும் என்ற பெரியோர்களின் உபதேசங்களையுஞ் சிரமேற்கொண்டு. சிவபஜனையை வைதிக சிவபாகவத ஸம்பிரதாயத்தை யனுசரித்துப் பிராசீன கானசாஸ்திரங்களின் மார்க்கங்களைத் தழு-

வியும். வேதவேதார்தப் பிரதிபாத்யரும், தேவதேவரும், விச்வாதிகரும், விச்வஸேவியரும், விச்வாந்தர்யாமியும், விச்வநியந்தாவும், விச்வரக்ஷகரும், முழுமுதற்கடவுளும், ஞானப்ரதாதாவும், பதஞ்சலி வியாக்ரபாதர் முதலான முனிச்சிரேஷ்டர்களுக்காகச் சிதம்பரத்தில் ஆனந்தநடனம் புரிபவரும் அத்வைத ஞானமூர்த்தியும் தன்னை பஜனஞ் செய்கிற பக்தகோடிகளின் சர்வாபீட்டங்களையும் பூர்த்தி செய்பவரும் கற்பனைகடந்த ஜோதிரூபமாய்த் திருச்சிற்றம்பலத்துள் விளங்காநின்ற, சிவகாம்யம்பாஸமேத ஸ்ரீநடராஜமூர்த்தியின் பஜநத்தைச்செய்து, ஸர்வாபீட்டங்களையும் பெறுவதற்காக, இந்நூலியற்றப் பெற்றிருக்கிறது. கானத்துடன்கூடிய ஸ்தோத்திரமாகையால், ஈசுவரகிருபை அதிசீக்கிரம் கிடைக்குமென்பதற்கையமில்லை இலங்கேசன் ஸாமகானத்தினால் சீக்கிரம் ஈசுவர கிருபையைப்பெற்றான் இதுபோல் கானத்துடன் கூடியபஜனத்தால் ஈசுவரகிருபையைப்பெற்றபக்தர்களின் சரித்திரங்களநேகமுண்டு. ஆகையால் கலியுகத்தில் ஈசுவரநாமபஜனத்தையே வற்புறுத்தியிருப்பதால் சிவபஜனையை முறைப்படி நடத்த விரும்புகிறவர்களுக்கு, இப்புஸ்தகம் மிகவும் உபயோகமுள்ளது. புஸ்தகம், நல்ல கிளேஸ்காகிதத்தில்முத்துப்போன்ற கிரந்தலிபிகளாலச்சிடப்பெற்றது. தமிழ் கீர்த்தனங்களும்.பாசுரங்களுமடங்கியிருக்கிறது ஆஸ்திகராயுள்ள ஒவ்வொருவர் கையிலுமிருக்கவேண்டியது. எல்லோரும் வாங்கவேண்டியதை உத்தேசித்தே இதன்விலையைக்குறைவாகஏற்படுத்தியிருக்கிறது. முகப்பில் நடராஜர் சிவகாமியம்மன் பிச்சருமிருக்கிறது. சுதேசமித்திரன், உத்யானபத்திரிகை,ஆர்யதர்மம், ஆரியமதஸம்வர்த்தனி, நாகை நீலலோசனி முதலிய பத்திரிகைகளுடையவும் அநேக வித்வான்களுடையவும் மதிப்புரைகளையும் பெற்றிருக்கிறது. ஒருபிரதிவாங்கிப் பார்த்தால், இதன் அருமைதெரியவரும். சிவபஜனை செய்வதற்கு இதைப்போன்ற புஸ்தகம் கிடைப்பதரிது.

இப்புஸ்தகத்திலடங்கிய விஷயங்கள்,

1. ஸ்ரீ சிதம்பரேச பஜனோத்ஸவஸம்பிரதாய சுலோகங்கள். 2. தோடய மங்களம். 3. ஸ்ரீ ஹரதத்தாசாரிய குருகீர்த்தனம். 4. சிதம்பரேசனை அழைத்தல். 5. கட்டியவசனம். 6. மந்த்ரபுஷ்பம் 7. க்ஷேத்ரமாகாத்மிய சுலோகங்கள். 8. தேவாரம், திருவாசகம்,

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பெரியபுராணம் திருமந்திரம் 9 கணேசத்தியானகீர்த்தனம். 10. ஸரஸ்வதீதியானகீர்த்தனம். 11. சுப்பிரமணியத்தியானகீர்த்தனம். 12. ஸாம்பசிவத்தியான கீர்த்தனம். 13. அம்பிகைத்தியான கீர்த்தனம். 14. நடராஜாத்தியான கீர்த்தனம். 15.சிவகாமசுந்தரீதியான கீர்த்தனம். 16. மஹாவிஷ்ணுதியான கீர்த்தனம் 17- மஹாலக்ஷ்மீதியானகீர்த்தனம். 18. ராமத்தியானகீர்த்தனம். 19. ஸீதாதேவீத்தியானகீர்த்தனம். 20. கிருஷ்ணத்தியான கீர்த்தனம். 21 ஆஞ்சநேயர் கீர்த்தனம். 22. நந்திகேவர்தியான கீர்த்தனம். 23. தக்ஷிணாமூர்த்தித்தியான கீர்த்தனம். 24. சண்டிகேசுவரர் கீர்த்தனம். 25. பிம்பத்திலிருந்து சிதம்பரேசனை தீபத்தில் பிரசன்னராயிருக்கும்படி அழைத்தல். 26. சிவநாம ஸங்கீர்த்தனம்- கைலாஸப் பிரதக்ஷிணம். 27. தாங்கங்கள் 28. அபங்கம். 29. முநிபத்நீகீதம். 30. கும்மி, கோலாட்டம் 31. மத்திழுத்தில் 32. தீபஸமாரோபணம் சிவாஷ்டபதி 33. கல்யாணம். 34 நலுங்கு. 35. ஊஞ்சல். 36. கப்பல் 37. லாலீ. 38 சயனம். 39. சிதம்பரேசனை எழுப்புதல் 40. மங்களம். 41. சிவோத்கர்ஷ சுலோகங்கள், 42. கநநயதேசிகஜிகிபிகி உரிகிடால் இரட்டைப்பல்லவி சக்ரதானம், சங்கீதசாஹித்ய மஹாவித்வான் குன்றக்குடி பிர்ம்மஸ்ரீ சி. கிருஷ்ணய்யரவர்கள் கீர்த்தனங்கள். 43. ஷையார் சகோதரர் சங்கீதஸாஹித்ய மஹாவித்வான் குன்றக்குடி பிர்ம்மஸ்ரீ சி.இராமபாகவதரவர்கள் கீர்த்தனங்கள் 44. ஷையார்தௌஹித்ரரும் ஜகத்குரு கானமஞ்சரீ சிதம்பரேசபஜன ரத்னாவளீ கிரந்தகர்த்தாவுமான குன்றக்குடி சங்கீதம் பிர்ம்மஸ்ரீ ரா.ம.வெ. சுப்பிரமணியசாஸ்திரிகளவர்கள் கீர்த்தனங்கள். 45. கந்தபுராணம். 46. திருப்புகழ் 47கோயிற்புராணம். 43. பதஞ்சலிஸ்தோத்ர சுலோகங்கள் இன்னும் பல அறிய பெரிய விஷயங்களும் அடங்கியிருக்கிறது புஸ்தகம் நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. 116. பக்கங்களையுடையது. அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்

உ

விளம்பரம்.

சிதம்பரேசபஜனரத்னாவளீ. (கிரந்தலிபி)		அணா	0	12	0
சிருங்கேரி ஆசார்யாள் படத்துடன் ஜகத்குரு கானமஞ்சரீ	(நாகரலிபி)	அணா	0	7	0
ஷை (கிரந்தலிபி)		அணா	0	4	0
மயூரகிரிக்கும்மி (தமிழ்)		அணா	0	4	0
மயூரகிரிநாதர் ஷட்ரத்னராகமாலிகை	(தமிழ்)	அணா	0	2	0
மயூரகிரித்தலபுராணசங்கிரகவசனம்	(தமிழ்)	அணா	0	6	0

(தபால்செலவுதனி)

கிடைக்குமிடம்:—

சங்கீதம், ரா.ம.வெ.சுப்பிரமணியசாஸ்திரிகள்,

பாறைத்தெரு. குன்றக்குடி.

(இராமநாதபுரம்ஜில்லா)

149928